# அறிஞர் அண்ணா சொன்ன அறிவுரைக் கதைகள்

தொகுத்தவர் :

வெ. பார்த்திபன்

கிடைக்குமிடம் :

ராமன் பதிப்பகம்

சென்னை-18

மறு பதிப்பு: 1970
விலை ரூ. 2-00
முத்து வெளியீடு
தோடுகுளம்

15174.

அச்சிட்டோர்:
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14,

# அறிவுரைக் கதைகள்

## கொஞ்சினால் போதுமா ?

கண்ணே! கனியமுதே! கற்கண்டே! செந்தேனே! என்று கொஞ்சினால்மட்டும்போதுமா? குழந்தை மகிழ்ச்சி ஒன்றினாலேயே குமரனாகிட முடியுமா? இயலாதல்லவா? அது போலவே இந்நாடு எந்நாடு, பொன்னாடு, புலவர் போற்றிய திருநாடு, வீரம் பொங்கிடும் ஆற்றல் மறவர் நாடு, என்றெல்லாம் புகழ் பாடுவதால் மட்டும், நாட்டினை நன்னிலைக்குக் கொண்டுவந்துவிட முடியுமா? நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவந்திடும் பொறுப்பினை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். புதிதாக நாம் எதனையும் ஆக்கக்கூடத் தேவையில்லை; நாட்டிலே உள்ளது என்ன என்று கண்டறிந்து பெற்றாலே போதும்.

## பரவும் நச்சுக்காற்று

எரிமலையும் பாலை நிலமும், சதுப்பு நில நடுக்கமும், கடற் கொந்தளிப்பும் பிறவுமான இயற்கையின் கோபம் இந்நாட்டின்மீது அதிக அளவு வீசப்படவில்லை.

மாருக இயற்கை இங்கு பசுமையையும் வளத்தையும் பாங்குடன் அளித்திடக் காண்கின்றோம். வாழ்ந்தே அறியாத மக்களாகவும் இந்நாட்டவர் இல்லை; 'மகஞ்ச தாரோ, அரப்பா' எனும் நிலைகளை நீண்ட நெடுங் காலத்திற்கு முன்பே பெற்றிருந்த சீர்மிகு வாழ்க்கை நடத்திய மக்கள் என்று வரலாறு காட்டுகிறது. இந் நிலையில் இங்கு சிலர் நச்சுக் காற்றினைப் பரவிவிடும் போக்கினை மட்டும் நீக்கிடும் ஆற்றல் நமக்கு இருந் திடின், எக்குறையும் இங்கு இல்லை என்று உலகினை நோக்கித் தலைநிமிர்ந்து கூறிட இயலும். இன்று நிலைமை அதுவோ? இல்லையே! வீட்டிலும் சரி, நாட் டிலும் சரி!

## ஒற்றுமையைப் பேணுவீர்

தொழில் ஸ்தாபனங்களில் ஐக்யமும் பலமும் கெடாதிருக்க வேண்டுமானுல் ஜன்னல் கம்பியையும் ஜாக்கிரதையுடன் கவனிக்கும் மாளிகைக்காரர்போல ஸ்தாபனத்தின் சகல உறுப்பினரையும் கவனித்து கட்டுக்கோப்பு கெடாதபடி பார்த்துக்கொள்ள வேண் டும். இந்த முறையைக் கவனியாததால் தொழிலாளர் ஸ்தாபனங்களிலே ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டு அதன் விளைவாக அதனுடைய போரிடும் சக்தி சிதறி விட்டதுண்டு.

## பொறி சிறிது-பகை பெரிது

நெருப்புப் பொறி எத்துணைச் சிறிதாயினும் அது தங்க இடங்கிடைத்துவிட்டால், தங்குமிடத்தை அழித் தொழிக்கும் வகைபோல் கலிங்க மன்னனின் கெடுமதி எனும் சிறு தீப்பொறி தங்க இடமளித்ததால், கலிங் கமே அழியும் நிலையைப் பெறவேண்டியதாயிற்று.

## புல்லாயுதத்தார்

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம். ஆரியருக்குக் காய்ந்த புல்—தர்ப்பையே—தமிழரை, தந்திரத்தால் வீழ்த்த ஆயுதமாயிற்று.

## படகுக்கு அடியில் வெடிப்புகள்

ஏழை அழுகிறான், ஏழையின் தொகை வளருகிறது. ஏழையின் ரகங்கள் வளருகின்றன — கவனிப்பார் இல்லை. சமுதாயத்தில் ஏழைகளின் தொகை பெருகுவது படகுக்கு அடியிலே ஏற்படும் வெடிப்புகள் என்பதை உணருவதில்லை. ஓரிடத்திற்கு அலங்காரப் பூச்சு தேடுகிறார்கள். அவர்கள் அறியவில்லை ஓரிடத்திற்கு அடியிலே ஏற்படும் ஓட்டைகளை.

## யானை சீறினால்?

ஏழைகளின் வாழ்வில் நிம்மதியை ஏற்படுத்தா விட்டால் உன்னையும், உன் உலகத்தையும் அழித்து விடுவான். அம்பாரியின் மீது ஏறிக்கொண்டால் யானையைக் கொடுமைப்படுத்தலாம் என்று எண்ணாதே. யானைக்குக் கோபம் பிறந்தால் அதன் காலின் கீழ் நீ கூழாகி விடுவாய்.

## ஏழை அறியா விளக்கு

சட்டம் ஓர் இருட்டறை! அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! அந்தப் பிரகாசமான விளக்கை ஏழைகளால் பெற முடிவதில்லை.

## ஏட்டிலும் நாட்டிலும்

நம்நாட்டு ஏடுகளிலே படித்திருக்கின்றேன். நம நாடு நன்செய் நிலங்களாலும் புன்செய் நிலங்களாலும்

நாற்புறமும் சூழப்பட்டது என்று; நாடெங்கும் செந்நெல்லும் செங்கரும்பும் மற்றும் பல விளை பொருள்களும் மலிந்து கிடக்குமென்று. ஆனால் ஊரிலே, நாட்டிலே நகரிலே நாம் காணுவது நேர்மாறான காட்சிகள். படிப்பது பசிப்பிணியறியா மக்கள்; பார்ப்பது பசியால் மிக நொந்து வாடி வதங்கும் பல்லாயிரக்கணக்கான பாட்டாளிகள் ஏட்டிலே காண்பது கண்ணுக்கினிய காட்சிதரும் கூடகோபுர மாடமாளிகைகள்; அலங்காரமான ஆபரண வகைகள்; இன்னபிற இன்பங்களை நுகரும் மக்கள். ஆனால் கண்ணால் காண்பது காதால் கேட்பது யாவும் உண்ண உணவின்றி இருக்க இடமின்றி உடுக்க உடையின்றி ஆயிரக்கணக்கான மக்கள் பரிதவிக்கும் பரிதாப நிலைமை—

## தரமே தேவை

குயிலுக்கு கிளியின் அழகு இல்லை; என்ன செய்வது! அந்த அழகு பெற்றுக்கொண்ட பிறகு கூவிட வாராய் என்றா கூறுகிறோம். இல்லையல்லவா! ஏதோ நிறம் கருமை எனினும் குரல் இனிமை—அதைச் சுவைப்போம் என்று இருக்கிறோம். அஃதேபோல், எல்லாத் திறமைகளும் குறைவற வந்து குவிந்தான பிறகு தான் 'அண்ணன்' என்று ஏற்றுக்கொள்வேன்—அது வரையில் முடியாது என்று இலட்சக்கணக்கான தம்பிமார்கள் கூறிவிடவில்லை; கூறியிருந்தாலும் நான் என்ன செய்ய முடியும்?

## தீண்டாமைத் தேள்

கெட்ட பொருளைத் தொடக்கூடாது—குப்பை கூளம், நாற்றப் பொருள் ஆகியவைகளிடம் நிச்சயமாகத தீண்டாமை அனுஷ்டிக்கத்தான் வேண்டும்.

## வரலாற்றை மறந்த தமிழன்

...தமிழ் நாட்டில் எப்படி நாம் நம்முடைய மன்னர்களை மறந்துவிட்டிருக்கின்றேமோ, எப்படி ஒரு மன்னனுடைய மகன் யாரென்று சரித்திர புத்தகங்களைப் புரட்டினால் வரகுணபாண்டியன் மகன் இரண்டாவது வரகுணபாண்டியன் என்று போட்டு, இது இல்லையென்பாரும் உண்டு என்று அடியிலே குறிப்புத் தரும் வகையில் குழப்பமான வரலாற்றை வைத்திருக்கிறேமோ, அதே முறையிலேதான் டாக்டர் நாயரைக் கூட இன்றைய தினம் நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

## அரண்மனையிலிருந்து ஆலமரத்துக்கு

அரண்மனையிலிருந்து பிறந்த குழந்தையானாலும் எப்படி சித்தார்த்தர் அரண்மனையிலே பிறந்தாலும் அவர் புத்த மார்க்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் அரச மரத்தடிக்கு வந்தாரோ அதைப்போல அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சி, வெட்டவெளிக்கு ஆலமரத்தடிக்கு வந்ததால்தான் அது மக்களுக்குப் பயன்படும் என்று கருதி சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சியை பெரியார் ராமசாமி மிகப் பாடுபட்டு எங்களையெல்லாம் துணைக்கு வைத்துக்கொண்டு, ஆலமரத் தடிக்குக் கொண்டு வந்தார்.

## வாழைப்பழம் இல்லை

சின்னக்குழந்தை அதிகமான வாழைப்பழம் தின்றுவிடும் என்று பயந்தால் தாத்தா என்ன செய்கின்றார். இந்தக் கையில் இருக்கின்ற வாழைப்பழத்தை அந்தக்

கையில் மறைத்து, பின்னாலே தள்ளி வாழைப்பழம் இல்லை என்று சொல்லவில்லையா? முன்னாலே காந்தி நல்லவர் என்று சொல்லி, இப்போது நல்லவர் இல்லை பார், ஆகா நல்லவர் இல்லை, நல்லவர் இல்லை என்று நீங்கள் ஏமாந்தால் அதற்கு நான் என்ன—செய்ய?

## உண்மை வலு

சுரவேகத்தில் இருப்பவனை, நான்கு பேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், நெம்பிக் கொண்டு எழுவான். அது வலுவின் அடையாளமல்ல; நோயின் நன்மை, கட்டான உடலை உடற்பயிற்சி முறைகளால் மேலும் வலுவுள்ளதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப்பேர் பிடித்திழுத்தாலும் நிலை குலையாத தன்மை கிடைக்கும். அது உண்மையான வலுவுக்கு அடையாளம்.

## வாழ வைப்பதே சாக வைப்பது

உயிர்வாழ உபயோகமாகும் தண்ணீர் உயிரையே குடித்து விடுகிறது—குளத்தில் விழுந்து இறக்கையில்! வாழ அவசியமாக இருக்கிற நெருப்பே நமது உடலை சாம்பலாக்குகிறது.

## மத்தாப்பூவும் அகல்விளக்கும்

மத்தாப்பூ கொளுத்தும்போது எவ்வளவு வண்ணம் எத்துணை ஒளி, ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்து போய்விடுகிறது. அதுபோலத்தான் ராசதந்திர முறை காரணமாக உபசாரம் தரும் ஒளி! சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை. மத்தாப்பூ போல் அல்ல நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றும்.

## கருத்து ஒருமித்த காதல்

கருத்து என்பது இருவர் மனது லயிப்பது. சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரில் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது.

## காதல் தோற்றம்

வீணையிலிருந்து நாதம் பிறக்கும். மலரிலிருந்து மணம் தோன்றும். காதலில் இருந்தோ கவி, சித்திரம், எல்லாம் தோன்றும்.

## பிரியாக் காதல்

உயிரும், உடலும், மலரும், மணமும், நரம்பும், நாதமும், மணியும், ஒளியும், கனியும், ருசியும் பிரியுமோ? பிரியின் பயனுள்ளதாமோ? அது போன்றதே காதல்.

## அனுபவசாலி அடிமை

மணமுள்ள மலர், சுவையுள்ள கனி, சுந்தரமான மாது இவைகளிடம் அனுபவிக்கத் தெரிந்தவர்கள் அடிமையாகிறார்கள்.

## அணைக்காத தீ!

காலையில் பற்றவைத்த அடுப்பை மாலையிலே அணைத்துவிடுவார்கள். விடியும்வரை இருந்தால் தீப் பற்றிக்கொள்ளும். காங்கிரஸ் அடுப்பிலே செய்ய வேண்டிய வேலையான சுதந்திரம் பெறுவது முடிந்துவிட்டது. அதை அணைத்துப் போட்டிருக்க வேண்டும்.

அணைத்துப் போடாததால்தான் இன்று நாடே பற்றி எரிகிறது.

## வைரம் என்பது நிலக்கரி

பொது வாழ்வுத் துறையில் புதியவர்கள் என்று அலட்சியமாகப் பேசுவது மட்டுமல்ல, புகக்கூடாதவர்கள் என்று வெறுப்புடன் பேசுவோர் நிரம்பிய நிலையை நான் அறிவேன். அரசியல் கட்சிகள் தேர்தல்களில் ஈடுபடும்போது ஏற்படும் வெற்றி தோல்விகள் ஓட்டு எண்ணி அறிவிக்கப்படும் முடிவுகள் காட்டும் பாடத்துடன் நின்று விடுவதல்ல! ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதே இதிலே முக்கியமான பாடமாகக் கொள்ள வேண்டும். வைரம் என்பது நெடுங்காலமாய் இறுக்கி,வைத்த ஒரு துண்டு நிலக்கரியேயாகும்.

## கொட்டடியில் குதூகலம்

சென்னைச் சிறையிலே பெரியாருடன் ஒரே வரிசைக் கட்டிடத்திலே தங்கி இருக்க நேரிட்டதை ஒரு வாய்ப்பாகவே கொண்டேன்.

குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள், உள்ளே நுழைந்ததும் தங்களுக்கு வேண்டியவர்கள் அங்கு இருப்பது கண்டால் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்கள்—எனக்கு உள்ளே நுழைந்ததும், "வந்து விட்டாயா? வா, வா; ஆறு எட்டா? நாலா, மூன்று?" என்று கேட்டபடி நண்பர்கள் என்னிடம் அன்புடன் வந்தபோது அது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

## ஆண்மகனின் மகிழ்வு

வீட்டிலே வீட்டுக்காரன் இல்லாத நேரத்தில் கொள்ளையடிக்கப் புகுந்த திருடனை வீட்டுக்காரியே பிடித்துக் கொடுப்பது போல நாங்கள் இல்லாத நேரம் திருச்செங்கோட்டிலே வெற்றியைப் பெற்றிருக்கிறீர்கள். அந்தச் செய்தி கேட்டு வீடு திரும்பிய ஆண்மகன் எத்தகைய மகிழ்வும் பெருமையும் கொள்வானோ அதுபோல நாங்களும் உணர்கிறோம்.

## தாய் யானையின் பயிற்சி

பெரியார் நம்மைத் திட்டுவதைப் பற்றியோ எழுதுவதைப் பற்றியோ, நாம் சிறிதும் வருத்தம் கொள்ளக் கூடாது.

காட்டில் யானை தன் குட்டிகளுக்கு இடையூறுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பயிற்சி அளிக்கும். எப்படிப்பட்ட பயிற்சி தெரியுமா? குட்டிகளை தனது துதிக்கையால் அடித்து, கீழே தள்ளி, பள்ளத்திலும், மேட்டிலும் உருட்டிப் புரட்டி எடுக்கும். அந்த யானையைப் போன்ற நிலையில், பெரியார் நமக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பயிற்சி வீண் போகப் போவதில்லை.

## புரட்சிக் கவிஞரின் கவிதை

பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார். காலத்தையே சிருஷ்டிக்கிறார்; காலத்தையே மாற்றுகிறார். காலத்தையே மாற்றுகிறார் என்பது மாத்திரமல்ல; மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார்.

அழைத்துச் செல்கிருர் என்பது மாத்திரமல்ல; சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிருர். தென்றல் வளரும்; நிலவு வளரும்; செல்வம் வளரும். அதுபோல அவரது கவிதைகளும் வளர வேண்டும்.

## முருங்கை மரத்தில் கம்பளிப்பூச்சி

காங்கிரஸ் கட்சி ஒரு முருங்கைமரம். அதில் தியாகிகள் என்னும் முருங்கைக் கீரையையும், முருங்கைக் காயையும் பறித்து குழம்பு வைத்து துவட்டியாகி விட்டது. இப்போது அங்கு கம்பளிப் பூச்சிகள் இருக்கின்றன. மரத்தில் இருக்கிறதே என்பதற்காக அதையுமா பிடித்துக் கறி சமைப்பார்கள்!

## அழகற்ற பெண்

நமது கழகம் அழகுள்ள பெண் அதற்குச் சீர் வரிசை தேவையில்லை. ஆனுல் காங்கிரஸ் மூக்கும் முழியும், நோக்கும், போக்கும் கலந்திருக்கிறது. அதனுல்தான் அதற்கு அதிக பணம் கொடுத்து சீர் வரிசை செய்ய வேண்டியிருக்கிறது.

## பணம் பத்தும் செய்யும்

கிழவன் ஒருவனுக்குப் பதினுறு வயதுடைய அழகான பாவையைத் தருவார்கள் என்ற தைரியத்தில் இருக்கிருன். அவனுக்கு எப்படி அந்தத் தைரியம் வந்தது? அவன் பெட்டியிலிருக்கும் பணம்தான் அந்தத் தைரியத்தைத் தந்தது. அதுபோல பணத்தின் பலத்தை நம்பி காங்கிரசு எனும் கிழம் நாட்டின் எதிர் காலம் எனும் இளம் பெண்ணை அடைய விரும்புகிறது.

## பசுமைக்கு வழி

அகமும் புறமும் கொண்டோர் நாம்; இன்று அறியாமையின் பிடியில் சிக்கியுள்ளோம்.

கரும்பு விளையும் நாடு இது; மக்கள் கசப்பு உண்டு உழல்வது காண்கிறோம்.

செந்நெல் விளைந்திடும் வளமிகு பூமி இது; இன்று கட்டாயப் பட்டினி அரச கட்டளையாகிடக் காண்கின்றோம்.

எல்லோருக்கும் ஓர் நிறை என்ற கவிதை பெற்றோம். இன்றோ இல்லாதார் தொகை வளர்ந்திடக் காண்கிறோம்.

உலை கொதிக்கிறது, பானை இசை பாடுகிறது கொண்டு வந்து போடு! கொண்டு வந்து போடு—என்று; அரிசி கொட்டிடின் சோறு காண்போம்; மணலைக் கொட்டிடின்?

செங்கரும்புத் துண்டொன்றைத் தூக்கிச் சென்று சிவந்த அதரம் இரத்தச் சிவப்பாகு மட்டும் கடித்துத் தின்கிறான் கண்ணின்மணி! காண்கிறோம். களித்திடுகின்றோம். கரும்புத் துண்டாக இன்றி, மூங்கில் துண்டாக இருந்திடின்!

முக்கனி கிடைத்திடாமல், எட்டிக்கனியைக் கொட்டி இஃது வேண்டுமோ என்று கேட்டிடின், என்ன எண்ணிக் கொள்வோம்!

இன்று பசுமையை வெகு பாடுபட்டு இல்லங்கள் தேடிப்பெறுகின்றன. பசுமை, தன்னாலே கிடைத்திடவில்லை; தாராளமாகவும் காணப்படவில்லை.

எங்கும், என்றும் பசுமை கொலுவிருக்கத் தக்க நிலை பெற்றிடலாம் இன்பத்திரு இடத்தில்; அதற்கான தோர் நல்லரசு அமைத்திடின்.

...தமிழன் எண்ணிப் பார்த்திடின், தக்க வழி யினைக் கண்டறியும் திறனுடையான்.

தமிழன், செயலார்வம் கொண்டிடின் எண்ணி யதைச் செய்து முடிக்க வல்லான்.

## முதலாளியும் தொழிலாளியும்

விதைத்துழுது அழுகிறாய்; வதைத்தருத்துச் செல் கிறான்! கொண்டு சென்று குவிக்கிறாய்; கொட்டிப் பூட்டி வைக்கிறான்!

பார் பாட்டாளித் தோழனே நன்றாகப் பார்! இதயத்தை உறுத்துகிறதா? மூடிக் கொள்ளாதே, கண்களை! விழித்துப் பார்! வேதனை எழும்புகிறதா? பரவாயில்லை. பார்...நீதான் பார்க்க வேண்டும்...கண் மூடிக் கிடந்தவனை நான் காட்டுவது தெரிகிறதா? நீதான் அவன்...அதை நினைத்த வண்ணம் இக்காட்சி களைப் பார்!

ஏர் பிடித்திழுக்கிறாய்; மார்பிலுதைத்து வதைக் கிறான்! பாடுபட்டு நெய்கிறாய்; பட்டுடுத்தி மகிழ்கிறான்!

ஏன் கண்களை மூடிக்கொள்கிறாய்? கடினமாக இருக்கிறதா?...நீதானப்பா நாட்டின் தேனீ, நடமாடும் 'தெய்வம்!'...இந்தக் காட்சிகளைக் கண்டதுமே, தவிக் கிறாயே! இத்தனை நாள், வேதனை உன்னை சந்தித்த போதெல்லாம் எங்கே மறைந்து போய்க் கிடந்தது, இந்த ஆத்திரம்? இன்னும் கொஞ்சம் பார்!

கருவிகளைக் காண்கிருய்; கைக்கொண்டவன் ஆள்கிருன்!

அதோ, அடிக்கிருனே கம்பு; அது ஏது தெரியுமா? நீ வெட்டித் தந்ததுதான்! சுட்டுப் பொசுக்குகிருனே அந்தத் துப்பாக்கிகள்; அவை நீ அன்று செய்து தந்தவைதான்!

காதுகளை மூடிக்கொள்கிருயே, உழைத்து ஓடான உத்தமனே! என் பேச்சு, உன் இதயத்தைச் சுட்டெரிக்கிறதா? பாவம்! நீ என்ன செய்வாய்? உனக்கு யாரும் இந்தக் காட்சிகளைக் காட்டவில்லை, இதுநாள்வரை!

ஆகவேதான் இந்தக் காட்சிகளைக் கண்டதும் துடிக்கிருய்! தொல்லை செய்வோரின் துடுக்கடக்குவேன் என்று உன் இதயம் துடிப்பது என் கண்ணுக்கு நன்ருகத் தெரிகிறது!

உத்தமனே, அவசரப்படாதே! இன்னும் கொஞ்சம் கேள்! உன்மீது சவாரி செய்யும் பிரபுக்களின் ஆணவப் பிடரியை நீ ஆட்டவேண்டும் என்பதுதான் எனது ஆசை!

ஏன் இப்படி உனது கண்கள் சிவப்பேறுகின்றன? எனது வார்த்தைகள் உன் கோபாக்கினியைக் கிளறுகின்றனவா? மகிழ்ச்சி நண்பா, எனக்கு இரட்டை மகிழ்ச்சி! உன் இதயத்தில் எரிமலை உதயமாக வேண்டும் என்பதுதானப்பா என் ஆசை! அது ஏற்பட்டுவிட்டதென்ருல் என் லட்சியம் நிறைவேறும்; நிம்மதி பெறுவேன். கிளி கூண்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டது! காளை கட்டவிழ்த்துக் கொண்டது! வீரன் விலங்கை முறித்துக் கிளம்பிவிட்டான் என்று எக்காளம் முழக்குவேன்! அதில்தான் நண்பா, உன் வாழ்வே இருக்கிறது!

''சரி, உன்னை நான் புரிந்துகொண்டேன். இப்போது என்ன செய்வது நான்? என்னை வேதனையிலாழ்த்தியவனை விரைவாகப் போய் வீழ்த்திவிடட்டுமா? கட்டளையிடும் கரங்களைக் கண்டதுண்டமாக்கி, கர்ஜனையிடும் வாயை இரண்டாகப் பிளந்து, உதைக்கும் காலை ஓராயிரம் துண்டு போட்டு, உழைக்காது மெருகேறி மினுமினுக்கும் அவன் 'சதைமலை'மீது ஏறிக் கோரத் தாண்டவம் செய்யட்டுமா? இத்தனை நாள் என் இரத்தமெல்லாம் உறிஞ்சிக் கொழுத்தானே, அதை வட்டி போட்டு வாங்கி, நான் உழைத்து அலுத்த இப்பூமிக்கு அர்ப்பணம் செய்யட்டுமா?'' என்று கேட்கிறாய்... வேண்டாமப்பா. வேண்டாம்! வேதனைகளை எடுத்துக் காட்டி விளக்கியதும், வெடித்த எரிமலையாகி விட்டாயே! வெடித்த எரிமலை, விரைவில் தன் கோரச் சப்தம் இழந்து அடங்கிவிடுமாம். அது தெரியுமோ உனக்கு? உன் உணர்ச்சி அப்படியாகிவிடக்கூடாது! ஆத்திரம் அறிவை அழித்துவிடும்! வேகம் விவேகப் பாதைக்கு முட்டுக்கட்டை போட்டுவிடும்! கொதித்து எழுந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குந்திவிடுவது பெரிய காரியமல்ல; வெட்டி வீழ்த்தி ரத்தம் சிந்தி விட்டுப் போய்விடுவது பிரமாதமல்ல; உனது இந்தப் புது உணர்ச்சி புது வாழ்வு காணப்படவேண்டும்!

''உணர்ச்சியைக் கிண்டிவிட்டு உபதேசம் செய்யக் கிளம்பி விட்டாயா?'' என்று என்னை இப்படி எரித்து விடுவது போலப் பார்க்கிறாயே! வேண்டாம் இவ்வளவு கோபம். வேதனைப் பட்டவனே! அவசரத்துக்கு அடிமையாகாதே! நான் உபதேசம் செய்ய வரவில்லை. 'உபதேசி'யாக 'உருத்திராட்சம்' உருட்டும் வீணன் நானல்ல என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! உன் வாழ்வு செம்மைப்பட வேண்டும்! உயரப்பனும் ஒட்டப்

பனும், ஒன்றாக வேண்டும்! உன் உரிமைகளை நீ பெற்றுத் துன்பமற்று வாழ வேண்டும் என்ற ஆசையினாலேதான் சொல்கிறேன்!

உழைப்போனே! உன் நிலையைப் பார், சிந்தி; ஏன் என்று கேளேன்; சக்திகளைத் திரட்டு; உரிமைப் போரில் இறங்கு, உன்னை அடிமைப்படுத்தும் அறியாமையை எதிர்த்து, ஜாதீய முறையைத் தகர்த்து முதலாளித்துவத்தை முறியடித்து வெற்றி காணப் புறப்படு! அவசரப்பட்டு ஆபத்துக்கு இரையாகாதே! வெண்ணெய் திரளுவதற்குள் தாழியை உடைத்து விடாதே!

## கழகப் பேச்சாளர்களுக்கு வேண்டுகோள்!

நாம் மக்களிடம் இதுவரை பேசிக் கொண்டு வந்ததை விட இன்னும் அதிகமாகப் பேச வேண்டும் என்பது மட்டுமல்ல—இதுவரையில் பயன்படுத்தி வந்த கடுமையான சொற்களை நீக்கிவிட வேண்டும்.

நம்முடைய கண்ணியம் இந்தத் துணைக் கண்டத்தில் எந்த அரசியல் கட்சிக்கும் இல்லையென்று மாற்றார்களே உண்மையில் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவுக்கு வார்த்தைகளிலுள்ள கடுமைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் ஏசுகிறார்களே என்ற காரணத்தாலே நாமும் திருப்பி ஏச வேண்டும் என்று கருதத் தேவையில்லை. பேச்சாளிக்கு சுலபத்தில் வரக்கூடிய மொழி திட்டக் கூடியதுதான்—அது நமக்குத் தெரியாதது அல்ல. அது 'பால லீலைகளில் ஒன்று' என்று கருதி அதை நீக்கி விட வேண்டும்.

பரிதாபத்திற்குரிய குதிரைகள் பகுத்தறிவற்ற ஜந்துக்களாக இருப்பதால் அவை இளைத்து நோஞ்

சான்களான போதும் எதிர்த்துக் கேட்க முடியவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி ஒரு அரசியல் கட்சியிலும் நிகழ்ந்தால்...? மிருகங்களால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் மனிதர்களால், அதுவும் மானமுள்ளவர்களால், எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? அந்த ஏமாளிகள் பணம் கிடைக்கவில்லையே என்று ஏங்கவில்லை—நினைத்தால் ஆயிரக்கணக்கில் தங்கள் காலடியில் கொண்டு வந்து கொட்டச் செய்யும் சமத்துவமும் சாமர்த்தியமும் அவர்களுக்கு உண்டு. புகழ், பெருமை, முகஸ்துதி இவற்றில் பங்கில்லையே என்று கலங்கவில்லை—இவையெல்லாம் எதிர்ப்பார்த்ததற்கு மேலாகவே நாட்டிலே கிடைத்தது. ஆனால் அவர்கள் உழைப்பு ஒத்துக் கொள்ளப்படவில்லை—வாழ்வைப் பலியிட்டு வதைப்பட்டவர்கள் மேல் நம்பிக்கை உண்டாகவில்லை எப்படியோ முளைத்து, எதற்காகவோ சேர்ந்து வாழ்ந்த ஜீவன்கள்மேல் ஏற்பட்ட நம்பிக்கைக் கூட இந்த இரங்கத் தக்கத் தியாகிகள் மேல் ஏற்படவில்லை. அவர்கள் உழைத்தார்கள்—வாழ முடியாதவர்களாக! பொறுக்க முடியாத நிலை வந்ததும் உதறித் தள்ளிவிட்டு வெளியேறினர்.

“சினிமாத் துறையில் சேர்ந்து பணத்தைக் குவித்துக் கொள்ளுகிறார்கள்—பள பளப்பான வாழ்வு நடத்துகிறார்கள்—பவுடர் மோகினிகளோடு சேர்ந்து சுற்றுகிறார்கள்.”

கருத்து வேறுபாட்டால், எதிர்க்க வேறு காரணம் இல்லாமல் கதறிக் கொண்டிருக்கும் கண்ருவி உருவங்களைப் பற்றியல்ல நான் குறிப்பிடுவது. கையாலாகாதவர்கள் குலைக்கத்தான் செய்வார்கள்! ஆனால், கருத்தும் கொள்கையும் குறிக்கோளும் ஒத்திருந்தும், உயரு

கிறார்களே என்ற பொறுமையால் உளறிக் கொட்டும் உதவாக்கரைகளைப் பற்றியே குறிப்பிடுகிறேன்.

இத்தகையோர் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்—பணம், பத்திரிகை, பக்தர்கள் பலத்தால்! விழியிலே பழுதிருப்பது வேறு—விழிகளே இல்லாதிருப்பது வேறு. ஆனால் விழிகளில் பழுதிருப்பவர்களுக்கு விழிகளே இல்லாத கூட்டம் பாதை காண்பிக்கப் பாடுபடுவது இந்த நாட்டின் விசித்திரங்களில் ஒன்று.

## எங்கள் திட்டம்

"கட்டை வண்டியை மாட்டுக்குப் பதிலாக, மனிதன் இழுப்பதை இங்கு பார்க்கிறோம்; அவர்கள் தங்குவதற்கு ஒரு குடிசையும் இல்லாமல் பாதை ஓரத்திலே படுத்துறங்குவதைப் பார்க்கிறோம். இன்னும் சின்னஞ்சிறு குடிசையிலே ஆணும் பெண்ணும், முதியவர்களும், பச்சிளங் குழந்தைகளும் ஒன்றாக வசிப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை மாற வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம், ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார்! 'தி. மு. கழகத்துக்காரர்கள் சட்டசபைக்கு வந்தால் நல்ல திட்டங்களைச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் ஏமாந்தேன்'—என்று!

நாம் சொல்லும் திட்டம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய திட்டமாகும்.

வெற்றிலை பாக்கு கொடு என்றால், சுண்ணாம்பையும் அதனுடன் சேர்த்துதான் கேட்பார்களே தவிர, சுண்ணாம்பு கேட்கவில்லையே' என்றால் என்ன அர்த்தம்.

வந்த விருந்தாளிக்கு 'சாதம் போடு' என்று மனைவியைப் பார்த்துக் கணவன் சொன்னால், அந்த மனைவி,

இலையில் வெறும் சாதத்தை மட்டும் வைத்துவிட்டு நின்ருல் என்ன பொருள்?

## அவன் அன்னியனே!

இன்று வடநாட்டானை எப்படி அன்னியன் என்று சொல்ல முடியும்? எல்லோரும் இந்தியர்கள்தான்— என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிருர்கள்.

அன்னியன் என்ருல் யார் என்பதை நாம் பார்க்க வேண்டும். யாருடைய பாஷை நமக்குப் புரியாதோ, அவன் நமக்கு அன்னியன்தான்! ஆங்கில பாஷை நமக்குப் புரியாது—ஆங்கிலேயன் அன்னியன்! அன்னியன் என்பதற்கு இலக்கணம், உணவு, உடை, மொழி இவைகளில் வேறுபாடுகள் காணப்படுவதுதான்.

அதெல்லாமிருக்கட்டும்; 'மத விஷயத்தில் வடநாட்டினரும் இந்துக்கள்; நாமும் இந்துக்கள் இல்லையா?'—என்று கேட்கிருர்கள். அவர்களுக்கு நான் சொல்லுவேன்—ஜெர்மானியரும் கிருஸ்தவர்கள் தான்; பிரான்சு நாட்டிலிருப்பவர்களும் கிருஸ்தவர்கள் தான்; இரு நாட்டினரும் ஒரே ஏசு பிரானைத்தான் வணங்குகிருர்கள்; பின் அவர்களுக்குள்ளே ஏன் யுத்தம்?

பாகிஸ்தானும், ஆப்பிரிக்க நாடுகளும் ஒரே முஸ்லிம் மதத்தைத் தழுவியவைதான். கிருஸ்தவர்களும், முஸ்லிம்களும் எங்கெங்கு இருக்கிருர்களோ அங்கேயெல்லாம் ஒரே கடவுளை, ஒரே நேரத்தில் ஒரே மாதிரியாகத்தான் தொழுகிருர்கள். அவர்களுக்குள்ளே ஏன் நாட்டுக்கு நாடு வேற்றுமை—பகை உணர்ச்சி— எல்லாம்?

## உறவும் உதாசீனமும்!

அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் சொன்னார். 'காமராசர் பெரியாரைப் போய்ப் பார்க்க மாட்டார்'—என்று அழுத்தந் திருத்தமாக அதைச் சொன்னார்.

தேர்தலுக்கு முன்னால் 'காமராசர் இங்குதான் உட்கார்ந்திருந்தார்; இந்த நாற்காலியில்தான் அமர்ந் திருந்தார்' என்றெல்லாம் சொல்லி, அந்த இடத்திலே யெல்லாம் திராவிடக் கழகத் தோழர்கள் பூசை செய்யக் கூடிய அளவுக்கு பக்தி கொண்டிருந்தார்கள்–இன்னும் இருக்கிறார்கள். தேர்தலுக்குப் பிறகு, காமராசர் ஏன் போய் பெரியாரைச் சந்திக்கவில்லை? தேர்தலுக்குப் பிறகு அவர் தேவையில்லை—எனவே சந்திக்கவில்லை.

முரட்டுக் கணவன்மார்கள், தேவைப்பட்ட நேரத் தில் உள்ளே சென்று மனைவியிடம் பேசி, கொஞ்சி விட்டு தெருத் திண்ணையிலே வந்து படுத்துக் கொள் கிறார்களே, அவர்களுக்கும்—காமராசருக்கும் என்ன வித்தியாசம்?

காமராசர் பெரியாரைச் சந்திக்க வேண்டுமென்று நான் சொன்னதற்கு அமைச்சர் சொன்ன பதில் வெட்கப்படக் கூடியதாகும். 'பெரியாருக்குக் காமராசர் மீது ஆசை; ஆனால் காமராசருக்குப் பெரியார் மீது ஆசை இல்லை' என்றார் அவர். இதற்கு என்ன பொருள்?

அதன் பிறகுதான் அவர் சொன்னார்—'அண்ணா துரையே பெரியாரைப் போய் பார்த்து, சமரசம் செய்ய வேண்டும்'—என்று!

நான் போக மாட்டேன் என்று சொல்லவில்லை. பெரியாரிடத்திலே இன்று தொத்திக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் தத்துப் பிள்ளைகளும் நான் அவர் வீட்டுக் குள்ளே நுழைந்தால் வழிவிடுவார்கள் என்பது எனக்

குத் தெரியும்; சமசரம் பேசவும் முடியும்; ஆனால் அது வரை சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அமைச்சருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை; சட்டத்தை நிறுத்தி வைக்கவும் முடியவில்லை; இக்கட்டான நிலைமை ஏற்பட்டது அவருக்கு! காரணம் சட்டசபை இப்படிப்பட்ட சட்டங்களைக் கண்டதில்லை; சட்டம் நிறைவேற்றப் பட்டுவிட்டது; காரணம் சட்டத்தை நிறுத்திவைக்கும் அளவுக்கு என் கரத்துக்கு வலுவு இல்லை.

நான் நெஞ்சத் தூய்மையோடு சொல்லிக் கொள்கிறேன்—15 பேருக்கு மேல் சட்டசபைக்கு வந்திருந்தால் இந்தச் சட்டம் வந்திருக்காது. இந்தச் சட்டத்தை, எங்களைத் தவிர வேறு எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை.

சர்க்கஸ்காரர்கள் புலிகளுக்கு நடுவே புள்ளி மான்களை நிறுத்துவது போல், நாங்கள் மட்டுமே அத்தனை பேருக்கும் மத்தியில் நின்று சட்டத்தை எதிர்த்தோம்.

## தங்கச் சுரங்கம்

கோலார் தங்கச் சுரங்கத்தில், நேரே கீழே இறங்கினால் நாம் தங்கத்தைப் பார்க்க முடியாது; பாறை எந்தப் பகுதியிலிருக்கிறதோ, அந்தப் பகுதியில்—தங்க ரேகை எங்கே ஓடுகிறதோ அங்கு வெட்டிய பிறகுதான் தங்கத்தைக் காண முடியும். உண்மையும் அப்படித் தான். தங்க ரேகை நேராக இல்லாமல் வளைந்து வளைந்துதான் செல்லும். அது ஓடும் பக்கத்தைக் கண்டு பிடிக்கும் திறனும் மனப் போக்கும் வேண்டும்.

## நாம் மட்டுமே இருக்கிறோம்!

சட்டசபையில் நடைபெற்ற கடைசி விவாதத்தில் நான் பேசிய பிறகு, பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் என்னிடம் வந்து, "நீங்கள் எவ்வளவுதான் பெரியாரை

ஆதரித்துப் பேசினாலும் அவர் மறுபடியும் உங்களைத் திட்டிக் கொண்டுதான் இருக்கப் போகிறார்'' என்று சொன்னார்.

அந்த அளவுக்கு அவர் உடலில் விஷம் ஏற்றப் பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அவர் அப்படி கருதினாலும் சரி; வேறு எப்படி கருதினாலும் சரி; அவருக்காக நாங்கள் இந்த முடிவை எடுக்கவில்லை. நெடுங்காலத்துக்குப் பிறகு, சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தை யாரேனும் புரட்டிப் பார்ப்பார்களேயானால் 'பெரியாரை அடக்கி ஒடுக்க வேண்டும்' என்று சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்துப் பேச அப்பொழுது வேறு நாதியில்லை; ஒதுக்கப்பட்டாலும், விரட்டப்பட்டாலும், வெட்கத்துக்கும் வேதனைக்கும் ஆளான அண்ணாத்துரையைத்தான் காண முடிகிறது' என்பதை உணருவார்கள்.

## ஆண்மை அடிபணிந்தது!

நான் பெரியாரவர்களுடன் பாடுபட்டேன். நான் அவரை கார்ல்மாக்ஸ் என்றேன்; லெனினுடன் ஒப்பிட்டுக் காட்டினேன்; சாக்ரடீசைப் போன்றவர் என்று உவமை காட்டி விளக்கினேன். நான் சொன்ன அதைத்தானே இன்று மிச்சமிருக்கும் தோழர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அரைத்த மாவையே தானே இன்றைக்கு அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

எந்தப் பெரியாரை மன அரிப்புடன், 'பைத்தியம்' என்று சொன்னாரோ, பிறகு அதே பெரியாரை—அந்த ஆணவம் அடங்கி, 'அடிபணிகிறேன்' என்று எங்கள் எதிரிலேயே—எங்கள் பேச்சுக்குப் பிறகு சொன்னார். இதுதான் பெரியாருக்கு எங்களுடைய காணிக்கை!

சிலர், பெரியாரவர்களுக்குத் தீப் பெட்டியும் பெட்ரோலும் காணிக்கையாகக் கொடுத்தார்களாம்!

"இட்டார்க்கு இட்டபலன்—என்பது போல, தகுதிக்குத் தக்கபடியே பலன் கிடைக்கும். நல்ல மனம் படைத்த நாம், காங்கிரஸ் என்னும் தராசில் தங்கத்தை வைத்து நிறுத்தி காணிக்கையாகத் தருகிறோம்."

## அவர்களும் நாமும்

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கோவில் திருவிழாவிலே இனிப்புப் பண்டம் விற்பவன்—அவன் உண்மையான பக்தனாக இருந்தாலும் கூட—சாமி யையோ, கருட வாகனத்தையோ கவனிக்க மாட்டான்; தாய்மார்கள், தங்கள் இடுப்பிலே எத்தனை குழந்தைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான் கணக்கிடுவான்.

## ஆங்கிலத்தின் அவசியம்

ஆங்கிலத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் சில தேசியத் தோழர்கள்—தங்களுடைய தேசியம் முற்றி விட்ட காரணத்திலே என்று நான் கருதுகிறேன்—'ஆங்கிலம் அன்னிய மொழி; ஆகவே ஆங்கிலம் ஆகாது' என்று!

அன்னியருடைய வழிகளெல்லாம் நமக்குத் தேவை யில்லையென்றால், இரயில் அன்னியன் கொடுத்தது தான்; கார்டு, கவர்களை அன்னியன் காலத்திலேதான் பார்த்தோம்; தபால்—தந்தி அன்னியன் காலத்திலே தான் கிடைத்தது. ஆப்ரேஷன், இஞ்செக்ஷன் அன்னியன் காலத்தில் வந்தவைதான். இவைகளெல் லாம் இருக்கலாம்—ஆனால், அவர்களுடைய மொழி

மட்டும் இருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்வது எந்த வாதம் என்பது எனக்குப் புரியவில்லை.

ஆகையினாலேதான், ஆங்கிலத்தை அன்னிய மொழி என்று கருதாமல், அன்னியரோடு தொடர்பு படுத்துகின்ற மொழி—என்று கருதுகிற காரணத்தால் நாம் அதை விலக்க முடியாது.

## தொழிலாளர் பிரச்னை

உலக அரங்கில் மிக முக்கியமானதாகவும், பலருடைய மனதை மருட்டக் கூடியதாகவும் தொழிலாளர் பிரச்னை வளர்ந்து விட்டது. நீதியையும் நேர்மையையும் சமுதாயத்தில் அமைதியையும் சுபீட்சத்தையும் விரும்பும் எவரும் தொழிலாளர் பிரச்னையை அலட்சியப் படுத்தியோ அல்லது அடக்கு முறைகளால் அழித்து விடக் கூடுமென்றோ எண்ண முடியாது. பிரச்னை நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டும் புதுப்புது உருவங்களைக் காட்டிக் கொண்டும் இருக்குமே யொழிய தானாக மங்கி விடவும் செய்யாது, தாக்குதலால் தளர்ந்தும் போய்விடாது. பொது அறிவும் ஜனநாயக உணர்ச்சியும் வளர வளர பிரச்னை பலம் பெற்றுக் கொண்டுதான் வரும்.

## முதலாளி பெருகுவதேன் ?

பெரிய தொழில் அமைப்பின் மூலம் ஏராளமான லாபம் பெற தனிப்பட்ட முதலாளிகளுக்கு வழி ஏற்படுகிறது. கோடீசுவரர்கள் இத்தகைய பெரிய தொழிற்சாலைகள் மூலமே உற்பத்தியாகின்றனர்.

முதலாளி எப்படி உற்பத்தியாகிறான்? எதனால் ஒருவன் முதலாளியாகிறான்? இதற்கு சுருக்கமான

பதில் தனிப்பட்ட மனிதன் லாபத்தால் முதலாளியாகிறன்; இன்னும் கொஞ்சம் விளக்கமாக, மார்க்ஸ் கூறுகிறபடி பார்த்தால், தொழிலாளிகளின் உழைப்பை முதலாளி திருடிக் கொள்கிறன். ஆகவே அவன் முதலாளியாகிறன்.

ஒருவன் ஒரு சரக்கை ஆறு ரூபாய்க்கு வாங்கிறன். அதை எட்டு ரூபாய்க்கு விற்கிறன். ஒரு ரூபாய் நிர்வாகச் செலவு போனல் மீதம் ஒரு ரூபாய் அவனுக்கு லாபம். ரூபாய் ஆயிரமாகி, ஆயிரம் லட்சமாகி, லட்சம் கோடியாகி, கோடி கணக்கிட முடியாத தொகையாகி விடுகிறது. முதலாளி லாபத்தால் பெருத்து பெரிய முதலாளியாகி விடுகிறன்.

## முதலாளி வளருவதேன் ?

டாடர்விற்கு, கிழக்கு மேற்காக 1500 மைல் அகன்று, தெற்கு வடக்காக 1600 மைல் விரிந்து இருக்கும் இந்தப் பரந்த இந்தியா வேட்டைக்காடு இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் எந்தப் பாகத்திலும் அவன் வியாபாரம் செய்யலாம்; ஜம்ஷெட்பூரில் இரும்பு எடுக்கலாம். கல்கத்தாவில் ஆணி செய்யலாம். அதை வேறெங்காவது கொண்டு போய் விற்கலாம். அவனை யாரும் தடுக்க முடியாது. இந்தியா பூராவும் அவனுக்கு வேட்டைக்காடு.

முதலாளி சரக்கை உற்பத்தி செய்கிறன். ஏராளமாக அவன் உற்பத்தி செய்யும் சரக்கை விற்கவேண்டுமல்லவா? ஆகவே இவனுக்கு மார்க்கெட் தேவையாக இருக்கிறது; எவ்வளவுக்கெவ்வளவு அவன் வியாபாரம் செய்யும் இடம், நாடு பெரிதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு முதலாளியின் லாபம் பெருகுகிறது—

பெரிய முதலாளியாகிறான். உற்பத்தியான சரக்கை விநியோகம் செய்ய மார்க்கெட் இல்லாவிடில் பெரிய முதலாளியாக எவனும் ஆகமுடியாது.

## முதலாளித்துவத்தை ஒடுக்க

முதலாளித்வத்தை ஒழிக்க பலவழிகள் இருக்கின்றன. முக்கியமாக முதலாளித்துவத்தை ஒழிக்க மூன்று வழிகள் உள்ளன. ஏன், நான்கு வழிகள் என்றுகூட சொல்லலாம். நான்காவது வழி சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம்.

முதலாளித்வம் ஒரு பலமான ஸ்தாபனம். அதை ஒழிக்க எல்லா நாடுகளும் விரும்புகின்றன. பல நாடுகள் வெற்றியும் பெற்றிருக்கின்றன. முதலாளித்வத்தை முறியடிக்கப் பயன்படும் சில முறைகளைத் தான், இப்போது கூறப் போகிறேன்.

முதலாளிகள் லாபத்தால் வளர்கிறார்கள் என்று முன்பே கூறிவிட்டேன். முதலாளிகள் லாபத்தைக் குறைக்கவேண்டும். முதலாளிகளுக்குக் கிடைக்கும் லாபத்தை அப்படியே அரசாங்கம் உறிஞ்சிவிட வேண்டும். முதலாளிகளுக்கு ஓரளவு லாபந்தான் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

## லாபமும் சர்க்காரும்

முதலாளிகளுக்குக் கிடைக்கும் லாபம் அவர்கள் மேனி மினுக்குக்குப் பயன்படுத்தும் அளவு இருக்கக் கூடாது. காப்பாற்றுவதற்குப் போதுமானதைத் தவிர மீதி பணத்தை வரிப்போட்டு அரசாங்கம் வாங்கிக் கொள்ளவேண்டும்.

அப்படிச் செய்தால் முதலாளிகள் பெருக மாட்டார்கள்; அவர்களிடம் பொருளும் குவியாது. வரிப் போட்டு அவர்களிடமிருந்து வாங்கும் பணத்தில் மக்களுக்கு நல்லது செய்யலாம். இதனுல் முதலாளித்வம் ஒழிந்துவிடும்; ஓங்கி வளராது!

முதலாளித்வத்தை குழி தோண்டிப் புதைக்க இன்னென்றும் செய்யலாம். தனிப்பட்ட எவரும் எந்தத் தொழிற்சாலையையும் எடுத்து நடத்த அனுமதிக்கக் கூடாது. முதலாளிகளிடமிருக்கும் எல்லா ஆலைகளையும் அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். எல்லா தொழிற்சாலைகளையும் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும். அவ்விதம் செய்தால் அதில் கிடைக்கும் லாபம் அரசாங்கத்தைச் சாரும், எந்த தனிப்பட்ட முதலாளியையும் சாராது; அதனுல் முதலாளித்வம் வளராது; பூண்டே இல்லாமல் ஒழிந்துவிடும். அப்படித்தான் இன்றைய உலகில் பலர் செய்து வருகிருர்கள்.

முதலாளித்வத்தின் முதுகெலும்பை முறிக்க, அவ்வப்போது அதைத் தடுக்கவேண்டும். அளவுக்கு மீறி வளர இடம் தராமல், தலைமேல் தட்டி சரிபடுத்திக் கொண்டே வரவேண்டும்.

## எல்லையைச் சுருக்கினுல்

முதலாளிகள் அதிக சரக்கைத் தயார் செய்து அகண்ட தன் நாடு பூராவிலும் விற்று, நிறைய லாபம் சம்பாதித்துப் பெரிய முதலாளிகள் ஆகிருர்கள். இம் முறையை ஒழிக்க வேண்டும். முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட இடம் வரையில்தான் வியாபாரம் செய்யலாம். அதற்கு மேல் செல்ல வேறு அரசாங்கத்தின்

அனுமதி பெறவேண்டும். அதாவது மிகப் பெரிய நாடுகளை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்துவிட வேண்டும். பரந்த பெரிய நாடுகளைச் சிறிய நாடுகளாக்கிவிட வேண்டும்.

நாட்டுப் பிரிவினையைக்கொண்டு, சிறிய நாடுகளாக்கிவிட்டால், நிச்சயமாக முதலாளித்வம் வளராது. இந்த முறை பல நாடுகளில் உள்ளன. நார்வேயும் ஸ்வீடனும் தனி நாடுகளாக இருப்பதால்தான் அங்கு முதலாளிகள் இல்லை.

முதலாளிகளை இந்த வழிகளில் குறைத்துவிடலாம். இதனால் முதலாளித்வம் தேய்ந்து மறைந்துவிடும். இன்று முதலாளிகள் ஒன்றாக சேருகிறார்கள். முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டு வியாபாரம் நடத்துகிறார்கள். 'ஒரு புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்க இவ்வளவு பணமா தேவை! நான் 10 லட்சம் போடுகிறேன், நீ 25 லட்சம் போடு' என்று கேட்டுத் தொழில் நடத்துகின்றனர். அதனால் மேலும் மேலும் பலமடைகிறார்கள். ஆகையால் தடுக்கவேண்டும்.

## மதயானை

முதலாளித்வம் ஒரு மதம் பிடித்த யானை. அந்த யானையைப் பிடித்து வாழை நாரினால் துதிக்கையைக் கட்டி, அந்தக் கயிறை ஒரு வாழைமரத்தில் கட்டிவிட்டு, "பார், பார்! நான் முதலாளித்வத்தைக் கட்டிப் போட்டு விட்டேன்" என்று கூறினால் சரியாகாது!

யானை ஒரு இழுப்பு இழுத்தால் அதன் கட்டு அறுந்துவிடும். அதுமட்டுமா? விடுபட்ட யானை தான் கட்டப்பட்டிருந்த வாழைமரத்தையேகூட வாயில் போட்டுக்கொள்ளும். அது யானை என்ற காரணத்தால்,

ஆகையால் வெறும் நாரினால், வாழைமரத்தில் யானையைக் கட்டுவதில் பயனில்லை என்று கூறுகிறோம் நாம். 'அரசாங்கமே யானையை அடக்க வாழைமரத்தில் கட்டாதே' என்று அரசாங்கத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

நாட்டைப் பிரித்துவிட்டால், வெளிநாட்டு முதலாளிகள் தலைகாட்ட முடியாது.

## சிறிய நாடுகளில்

முதலாளிகள் இன்றைய உலகில் பெரிய நாடுகளில்தான் இருக்கிறார்கள். சிறிய நாடுகளில் முதலாளிகள் இல்லை.

நார்வே நாட்டிலே முதலாளிகள் இருக்கிறார்களா? இல்லை. கிரீஸில் முதலாளிகள் உள்ளனரா? ஸ்வீடனில் முதலாளிகள் உள்ளனரா? ஸ்விட்ஜர்லாந்தில் முதலாளிகளைப் பார்க்க முடியுமா? ஸ்பெயினில் முதலாளிகள் வாழ்கிறார்களா? பாரீஸில் பார்க்க முடியுமா முதலாளிகளை? அமெரிக்காவில் முதலாளியிருக்கிறான். அடுத்தபடி இந்தியாவில் வளர்கிறான். நான் குறிப்பிட்ட சிறிய நாடுகளில் முதலாளிகள் ஏன் இல்லை தெரியுமா? அந்த நாடு இந்தியாவைப் போல மிகப் பெரியதல்ல. அந்த நாட்டிலிருக்கும் வியாபாரி ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோடுகளுக்கும் இடையே தான் வியாபாரம் செய்ய வேண்டும். எனவே அவன் பெரிய முதலாளியாவதில்லை.

## தேசிய மயமாக்கு

டாட்டாக்களும், பிர்லாக்களும், பஜாஜிகளும், டால்மியாக்களும் இந்த பெருத்த லாபந்தரும் தொழிற்சாலைகளை நடத்துவதினாலேயேதான் உண்டாகின்றனர்.

முதலாளித்வம் இந்த முறையினாலே உண்டாகிறது. தொழிலாளர் துயரம் வளருவதற்கு இதுவே காரணம். எனவே பெருத்த லாபந்தரக் கூடியதும், பெரிய தொகையான முதலும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வைப் பொறுத்தும் இருக்கும். இந்த மூலாதாரமான தொழில்களை தனிப்பட்டவர்களின் உரிமைகளாகாவிட்டால் அதன்மூலம் முதலாளித்வம் வளர்ந்து பொருளாதார பேதம் மிகுந்து போகும் நிலை வரக்கூடுமாகையால் இவைகளைச் சர்க்காரே நடத்துவது சாலச் சிறந்ததாகும். இவைமூலம் கிடைக்கக் கூடிய லாபம் நாட்டு மக்களுக்கே வந்து சேரும்! வாழ்க்கைத் தரம் உயரும்.

## பொதுமக்கள் யார்?

முதலாளி உற்பத்தி செய்யும் பண்டம் தொழிலாளியின் உழைப்பினால் ஆக்கப்படுகிறது. அந்தப் பண்டத்தை வாங்கி உபயோகிப்போர் அந்த தொழிலிலே முதலாளியாகவோ, தொழிலாளியாகவே இருப்பதில்லை. இருந்தேயாக வேண்டுமென்கிற அவசியமில்லை. ஆக அந்தத் தொழிலிலே நேரிடையாகச் சம்பந்தப்படாத, ஆனால் அந்தத் தொழிலில் உண்டாக்கப்படும் பண்டத்தை வாங்கி உபயோகிக்கும் பொதுமக்கள் தொகை ஒன்று இருக்கிறது. அவர்கள் கொடுக்கும் "விலை" தான் உழைக்கின்ற தொழிலாளிக்கும் தொழிலை ஆளும் முதலாளிக்கும் முறையே கூலியாகவும், லாபமாகவும் போய்ச் சேருகிறது. இந்த 'விலை'யைக் கூலியென்றும் லாபமென்றும் பிரிக்கும் முறை சரியானபடி இருப்பதைப் பொறுத்தே தொழிலவளம் இருக்கமுடியும். இந்த முறையைப்பற்றி எடுத்துக் கூற, திருத்தி அமைக்க முதலாளிகட்கோ தொழிலாளிகட்கோ இருக்

கும் உரிமைபோல விலைகொடுத்து வாங்கும் பொது மக்களுக்கும் உண்டு. எனவே அவர்களின் கருத்து இத்தகைய சமயங்களிலே தெளிவாகத் தெரிவது அவசியமாகிறது; முக்கியமாகிறது. எங்கோ யார் யாருக்குள்ளாகவோ எதற்கோ நடக்கும் போராட்டம் இது. நமக்கு சம்பந்தமில்லாதது என்ற எண்ணம் பொதுமக்கள் மனதிலே பல காலமாக இருந்துவருகிறது. அதனாலேதான் ரயில்வேக்காரன் ஸ்ட்ரைக், மில்காரன் ஸ்ட்ரைக் என்று தமக்குத் துளியும் சம்பந்தமேயில்லாத பிரச்னை என்ற மனப்போக்கில் மக்கள் பேசுகின்றனர். இது தவறு.

## கடமை என்ன?

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது முதலாளி இலாபம் குறைகிறது என்று குறை கூறுகிறான். சர்க்கார் அமைதி கெடுகிறது என்று கூறுகிறது. தனம் படைத்த தலைவர்கள் பொதுமக்களுக்கு இடைஞ்சல் என்று பேசுகின்றனர். ஆனால் தொழிலாளர்களின் வீட்டிலே துயரம், பட்டினி சூழ்ந்துகொள்கிறது. இதனைக் கவனிக்க மனம் இல்லை. உரிமைக்காக உணவுக்காகப் போராடும் தொழிலாளியை லாபத்துக்காகப் பாடுபடும் முதலாளி அடக்கும்போது பொது மக்கள் கடமை என்ன? தொழிலாளர்களை ஆதரிக்க வேண்டும். அவர்களின் உழைப்பே சமூகத்தின் உயிர் நாடி. அவர்களின் வேதனை நமது வேதனை.

## உரிமை ஏது?

மக்கள் தங்கள் உபயோகத்துக்காக விலை கொடுத்து வாங்கும் பண்டத்தின் மூலம் கிடைக்கும் பணத்தைப் பங்கு போட்டுக் கொள்வதிலே இரு சாரா

ருக்குமிடையே ஏற்படும் சச்சரவு இது—நமது பணம் நாம் கொடுத்த தொகை—ஆகவே அது பற்றிய பிரிவினைத் தகராறு வருகிறபோது நமக்கும் அந்தப் பிரச்னையிலே சம்பந்தம் கொள்ள, அபிப்பிராயம் கூற சிக்கலைப் போக்க முழு உரிமையிருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட வேண்டும் பொது மக்கள் மனதிலே. இரு சாரார் கூறும் வாதங்களில் யார் கூறுவது நியாயம் என்பதை சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். சீர் தூக்கிப் பார்த்து நியாயம என்று மனதிலே படுவதை தைரியமாக எடுத்துக் கூறவேண்டும். பண்டம் வாங்குபவன் நான், பணம் கொடுப்பவன் நான், நான் கொடுத்த பணத்தை யார் யார் எந்தெந்த அளவு எடுத்துக் கொள்வது என்று நியாயம் கூற நான் வருவேன். எனக்கு அந்த உரிமை உண்டு. ஏனெனில் எந்தப் பணத்தில் பங்கு விகிதத்துக்காக சச்சரவு வந்ததோ அந்தப் பணத்தைத் தந்தவனே நான் என்று கூறும் உரிமையை பொது மக்கள் மறக்கக் கூடாது. இந்த உரிமையை பொதுமக்கள் உணரவும் உணர்ந்து நியாயம் கூறவும் தகராறுகளைத் தீர்க்கவும் முன் வருமாறு பொது மக்களை அழைக்கும் பணியினை இயக்கம் செய்து வருகிறது.

## போரும் பொது நலமும்

தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டுமே இருக்கும் நிலை மாறி அவன் தொழிற்சாலைகளிலே பங்காளியுமாக்கப்பட்டால் விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

பொதுநலம் பாட்டாளி ஆட்சியிலேதான் மலர முடியும். அந்த ஆட்சியின் வெற்றியினுல் மட்டுமே உழைப்பு ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும்

விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும்.

போர் என்றால் ரத்தம் என்று களத்திலே உள்ளவர் கூறுவர்; நாட்டிலே உள்ள ஏழைகள் போர் என்றால் அளவு அரிசியும் வேறு பல அவதியும் ஒன்று கூறுவர். ஆனால் முதலாளிகளுக்கோ லட்சக்கணக்கில் லாபம், நம்பிக்கை ஒளி. தொழிலுக்கு வளர்ச்சி.

## நல்ல கதி நாடுவோரே!

கோடி கோடியாக லாபம் குவித்திருந்தாலும் முதலாளிமார்கள் குமுறும் தொழிலாளியிடம் குளிர்ந்த முகத்துடன் நடக்க முன்வருவதில்லை. கோகில வாணிகளுக்குக் கொட்டித்தரவும், கோலாகலமான வாழ்க்கை நடத்தவும், கோயில் கும்பாபிஷேக செலவு செய்யவும் மனம் வருகிறதே தவிர தொழிலாளிகளுக்கு போனஸ் தருவதற்குக்கூட மனம் சுலபத்திலே இடந் தருவதில்லை. ஏழையின் வயிற்றிலடித்து திரட்டிய பணத்தை உருட்டி வைத்துக் கொண்டிருக்கும் செல்வந்தர்கள் பணத்தை பகுத்தறிவுக்கோ பயன் தரும் பணிக்கோ செலவிடும் திருந்திய மனம் உடையவர்களல்ல. போக போக்கியத்துக்கும் போகிற கதி நல்லதாக இருக்கவேண்டுமே என்பதற்காக மட்டும் பணத்தைச் செலவிடுவார்கள்.

## கூட்டணி தேவை

தொழிலாளியின் வாழ்வு முதலாளியின் நாக்கு நுனியில் இருந்து வந்தது. 'வேலையில்லை என்றால் இல்லைதான். ஐயா சொன்னால் சொன்னதுதான்!' இந்த முறை சங்க ரீதியாக இருக்கும் தொழில் ஸ்தாபனங்களில் இருப்பதென்றால் ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்களின் ஜீவாதார உரிமை பாழ்படும்.

குறைகளை உணர்ந்து அவைகளுக்கு காரணம் யாவை என்பதற்குரிய விவாதத்திலே ஈடுபட்டு உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்து பிறகு அவைகளைப் போக்கிக் கொள்ள முயற்சித்துப் பார்த்து முடியாது போன பிறகு தொழிலாளர்கள் ஓர் ஸ்தாபன ரீதியாக தமது குறைகளை எடுத்துக் கூறித்தான் பரிகாரம் தேடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். தங்கள் வாழ்க்கை முறையும் தொழில் முறையும் தங்களுக்குள்ள வாழ்க்கை வசதிக் குறைகளும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரே விதமானதாக இருக்கக் கண்டு அனைவருக்கும் உள்ள ஒரே வகை வியாதி என்று தெரிவதால் அனைவருக்கும் ஒரே வகை மருந்து தேட வேண்டும் என்ற முடிவு செய்து ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இந்தப் பொதுத்தன்மை கெடாதிருக்கு மட்டும் ஸ்தாபனம் அவசியமானது மட்டுமல்ல; பயனுள்ளதுமாகும்.

## ஐக்கியம் குலைவதேன்?

தொழில் ஸ்தாபனங்களில் ஐக்கியமும் பலமும் கெடாதிருக்க வேண்டுமானால் ஜன்னல் கம்பியையும் ஜாக்கிரத்தையுடன் கவனிக்கும் மாளிகைக்காரர்போல ஸ்தாபனத்தின் சகல உறுப்பினரையும் கவனித்துக் கட்டுக்கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த முறையை கவனியாததால் தொழிலாளர் ஸ்தாபனங்களிலே ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு அதன் விளைவாக அதனுடைய போரிடும் சக்தி சிதறிவிட்டதுண்டு.

தாங்கும் சக்தி தாக்கும் சக்தி இரண்டும் ஒருசேர ஒரு ஸ்தாபனத்துக்குத் தேவை. அதற்கு ஏற்ற வகையிலே அந்த அமைப்பு இருக்கவேண்டும்; இருக்க

வேண்டுமானுல் இருவகை சக்திகளேயும் திரட்டவும் திரட்டியதை உபயோகிக்கவும் ஏற்ப தகுதி படைத்த வர்கள் ஸ்தாபனத்தில் இருக்கவேண்டும்.

## அடிப்படை வேண்டும்

தொழிலாளர் ஸ்தாபனம் மனக்குறையின் மீதும் ஏற்பட்டு விடுவதுண்டு இவை சரியான அடிப்படை யல்ல. வாழ்வதற்கு உழைக்கிறேம், ஆனல் வாழ்வு இல்லே! உழைக்காது வாழ்கிருர்கள்; அந்த வாழ்வுக்குத் தங்கு தடையில்லே! 'வாழ்வோம் அனைவரும், வாழ உழைப்போம். ஒருவன் உழைப்பின் மீது மற்ருெரு வரின் வாழ்வு அமைக்கப்படும் அநீதியை ஒழிப்போம்' என்ற அடிப்படைகளின் மீது கட்டப்பட்டுள்ள தொழில் ஸ்தாபனங்கள், இந்த உன்னதமான லட்சியம் ஈடேற வேண்டும் என்ற பெருநோக்கத்தை உறுதுணே யாகக் கொண்டு, ஸ்தாபனத்தின் நடைமுறையில் உறுப்பினர்களுக்குள் உள்ளக்கொதிப்போ கசப்போ ஏற்படாத வகையிலும், இன்ஞர் செய்கின்ற காரியம் இன்ஞர்க்கு சரியென்ற நிலே ஏற்படாத வகையிலும் ஸ்தாபனத்தின் மூலக்கொள்கைக்கு ஊறு நேரிடாத முறையில் நடத்திச் சென்ருலும் ஐக்கியம் கெடாது. பலனும் நிச்சயம் விளேயும்.

## கூலி உயர்வு ஏன்?

கோடி கோடியாக இலாபமடித்த முதலாளியை; நாடி நரம்பு முறியப் பாடுபடும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்கிருர்கள் என்ருல் தொழிலாளர்கள் தங்கள் மாளிகையிலே உள்ள மூன்ருவது மாடிக்குப் பளிங்குக் கல் அமைக்கப் பணம் கேட்கவில்லே. குடிசையில் படுத்து உறங்கும்போது பசியால் சிறுகுடலேப்

பெருங்குடல் தின்றுவிடாதபடி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே, கூலி கொஞ்சம் கூட்டிக் கொடுக்கும்படி கேட்கிருர்கள்.

தொழிலாளர் வாழ்க்கையிலே இப்படி வறுமைத் தேள் கொட்டும்படி செய்துவிட்டுப் பிறகு அவர்கள் கட்டுக்கு அடங்குவதில்லை. வேலை நிறுத்தம் செய்து தொழில் பெருக்கத்தைக் கெடுக்கிருர்கள்—கலவரம் செய்கிருர்கள்—என்று குறை கூறுவதும் சரியாகுமா?

## எங்கும் கிளர்ச்சி

ஆலைத் தோழர்கள் முதற்கொண்டு அரசாங்க உத்தியோகஸ்தர் வரையில் சம்பள உயர்வுக்காகவும், வாழ்க்கையின் அடிப்படை தேவைகள் தமக்கு அளிக்கப் படவேண்டும் என்பதற்காகவும், கிளர்ச்சி செய்து, கஷ்ட நஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு, சிற்சில சமயங்களில் தோல்வி அடைந்த போதிலும், பொது வாக ஓரளவு வெற்றி பெற்று வருகிருர்கள். பொருளா தார முறையிலே காணப்படும் பேதத்தின் பலனுக, உத்தியோக மண்டலங்களில் ஒரு சிலர் உச்சியில் அமர்ந்து கொண்டு, கொழுத்த சம்பளம் வாங்கு கின்றனர். அவர்கள் பிறப்பிக்கும் கட்டளைகளை அமுலுக்கும் கொண்டு வர உழைக்கும் எண்ணற்ற சிறு உத்தியோகஸ்தர்கள், குறைந்த சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, குடும்ப பாரம் தாங்கமாட்டாமல் கஷ்டத்தை அனுபவிக்கிருர்கள்.

## நமது நோக்கம்

பொருள் பாடுபடுபவனுக்குப் போய் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்கு

செலவிடவேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு வழிகளில் ஒன்றுக்கு மற்றொன்றை பாழாக்கக் கூடாது. ஒரு கண்ணை மூடி மற்றொரு கண்ணை மட்டும் கொண்டே பார்த்தால் உருவம் சரியாகத் தெரியாது.

வெளிநாட்டிலிருந்து இதற்காக ஒரு குழு வந்து விசாரிக்குமானால், ஆதாரங்கள் ஆயிரம் காட்டி நிரூபிப்பேன். இங்கே வறண்ட தலைகள், ஒட்டிய வயிறு, குழிவிழுந்த கண்கள் ஏராளம். உழைத்து உருக்குலைந்த தோழர்கள் பலரே பணியாற்றுகின்றனர். தொழிலாளர் பலர் அங்கம் வகிக்கின்றனர்.

## வெடிமருந்தும் தீப்பந்தமும்

விவசாயிகளின் மத்தியில் அரசியல்வாதிகள் புகுந்து அவர்களின் வேதனையைக் களையச் செய்வது என்பது வெறும் பட்டாசு கொளுத்துவது போன்றதல்ல. தீப்பந்தம் தாங்கி வெடிமருந்துச் சாலைக்குள் நுழைவது போல ஆபத்து நிறைந்தது. ஆகவேதான் தீப்பந்தம் அங்கே நெருங்குதல் கூடாது. அரசியல் வாதிகள் போகக்கூடாது என்பதை நான் அவ்வளவு வலியுறுத்துகிறேன்.

## சிதறிய நெல்லிக்காய்

தொழிலாளரின் சக்தி அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைபோல கிடக்கிறது. சிதறுண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. உருவாகும் உதயக்காட்சி தென்படவில்லை. கீழே முதலாளித்வம் மேலே ஜாதிக்கொடுமை. இரண்டுக்குமிடையே அழுத்தப்பட்டு விழிகள் பிதுங்க வேதனைப் பட்டுக் கொண்டு கிடக்கிறான் பாட்டாளி.

## டாலர் நாட்டியம்

வடநாடு தொழில்வளத்திலே மிக மிக முன்னேறிக் கொண்டு போகிறது. மேனாடுகளை மிஞ்சும் அளவுக்குக் கூட அதிலும் அமெரிக்கா கூட்டுறவுடன் வளரு கிறது. நர்மதை நதிக்குமேலே பவுன் அல்ல, ரூபாயு மல்ல, டாலர் நாட்டியமாடுகிறது. முன்பு பொருமை யுடன் பிரிட்டிஷ் முதலாளிகள் எதிர்த்தனர், வடநாட்டு முதலாளிமார்களை. இப்போது அவர்களை அமெரிக்க முதலாளிகள் புன்னகையுடன் தழுவிக்கொண்டு கூட் டாளியாக ஆக்கிக்கொண்டனர். ஆகவே தொழிற் சாலைகள் நிம்பிய நாடாகிறது வடக்கு. தென்னாடு இதேபோது விவசாய நாடாகவே இருக்கிறது.

## பிரிவினை கேட்பது குற்றமா?

பிரிவினை கேட்பது குற்லமல்ல; அதற்கு வாதம் தேவையில்லை. நான் வீட்டுக்குச் சொந்தக்காரன்; எதிர் வீட்டுக்காரனிடம் விவாதம் தேவையில்லை. திருடன் என் வீட்டிற்குள் நுழைந்தால் அப்போது எனக்கிருக் கும் பலத்தைக்கொண்டு அவன் கழுத்தை நெறிக்கலாம். அது மனுமுறையா மார்க்சீய முறையா என்பதல்ல பிரச்னை; மார்க்சீயத்தில், காணும் சில பகுதிகளுக்கு நான் விரோதியல்ல. மார்க்சீயத்திற்கு மண்டியிடு கிறேன். அதில் ஆறும் பக்கத்தில் பத்தாம் வரியில் விளக்கம் உண்டா என்பது அல்ல எனது கவலை. இந்த நாட்டுமக்கள் கேட்டால் கொடுக்க முடியுமா? இது தான் எனக்குத் தேவை. பிரிவினைத் திட்டம் அசைக்க முடியாதது; அதிலே ஆழ்ந்த நம்பிக்கை நமக்கெல்லாம் உண்டு.

[library stamp]

## எல்லைக்கோடு தொல்லைக்கல்ல

பிரியும் திராவிடம் பாகிஸ்தான் போன்று பர்மாவைப் போன்று ஆசியாவிலேதான் இருக்கும். இரண்யன் உலகை பாயாக சுருட்டினான் என்று புராணம் கூறுகிறதே அதைப்போல திராவிடத்தைச் சுற்றி நியூஸிலாந்துக்கு அருகில் வைத்துவிடமாட்டோம். குறுக்கே ஒரு சுவர் வேண்டுமென்கிறோம். எல்லைக்கோடு போடுவதால் பகை வளர வேண்டுமென்பதல்ல. எல்லைக்கப்பால் அவர்கள் உழைப்பு, அவனவன் உழைப்பை, அவனவனே அனுபவிக்க வேண்டும்.

## பிரிந்தால் வாழுமா?

இந்த முறை ரஷ்யாவில் இல்லையே என்றால் ஜார் இருந்தபோது அங்கே இனப்போராட்டமே எழவில்லை; சியாங்கின் சைனாவில் மாசேதுங் அரசியல் முறையைத் தான் மாற்றினாரே தவிர எல்லையையல்ல. பிரிய முடியுமா என்பதல்ல கேள்வி. பிரிந்தால் வாழ முடியுமா என்று கேட்டால் அர்த்தமிருக்கிறது. வாழ முடியும் என்று நாம் கூறுகிறோம். ஒரு நாடு தனித்து வாழ வேண்டிய எல்லா வளங்களும் இங்கே உண்டு. எதிரியும் படையெடுக்க முடியாத இயற்கை அரண்கள் நிரம்பியது திராவிடம்.

## கருத்துக் குருடர்கள்

திராவிடத்திலே உள்ளவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நால்வரும் ஒன்றாக வேண்டுமென்பதில்லை; நாம் கேட்பது கூட்டாட்சிதான். அந்தந்த நாட்டிலே அவர்கள் மொழிதான் உரிமை பெற்றிருக்கும். மொழி வழி நாடுகள் அமைவதைப் பலர் ஆதரிக்கின்றனர்! ஆனால் இனவழி அமைவதை

எதிர்க்கின்றனர். இது எப்படி இருக்கிறது என்ருல், வாழைப்பழம் பிடிக்கும், கொய்யா தேவை, மாம்பழம் விருப்பந்தான், தேவைதான், ஆனல் பஞ்சாமிர்தம் கசப்பு என்ருல் நாக்கிலே கோளாறு இருக்கிறது என்று பொருள். அதைப்போல தமிழ், தெலுங்கு, கேரள, கன்னட நாடுகள் அமையவேண்டுமென்று விரும்பும் கம்யூனிஸ்டுகள் இனவழி திராவிடநாடு கூட்டரசாக வேண்டும் என்பதை எதிர்ப்பது கருத்திலே கோளாறு அல்ல என்றுதான் கூறவேண்டும்.

## ஆரியத்தால் விளைந்த கேடு

முதலாளி—பாட்டாளி என்ற பேதம் இருப்பதால் எப்படி உழைப்பின் பலனை உழைப்பவன் முழுதும் அனுபவிக்க முடியாது போய்விடுகிறதோ, பட்டு நெய்தவன் கந்தை கட்டவும், மாளிகைக் கட்டியவன் மண் வீட்டில் தவிக்கவும், செந்நெல் விளைவித்தவன் வரகரிசி உண்ணவும், நெற்றி வியர்வை நிலமீது விழப் பாடுபட்டவன் நேற்றையப் பட்டினியைப் பற்றி இன்று கஞ்சிக் கலயத்தைக் கண்டு பேசுகிருனே அதுபோலவே ஆரிய திராவிட பேதமிருப்பதால், உழைக்க நாமும் வாழ அவர்களும், கோயில் கட்ட நாமும் குருக்களாக வர அவர்களும், தற்குறிகளாக நாமும் தர்மசாஸ்திர பண்டிதர்களாக அவர்களும், ஓட்டு அளிக்க நாமும் ஊர் ஆள அவர்களும், பங்கா இழுக்க நாமும் பற்பல உயர் உத்தியோகங்களில் அமர அவர்களும், சூத்திரராக நாமும் பூசுரராக அவர்களும் நாட்டிலே இருக்கிருேம். நமது உழைப்பு நமக்குப் பலன் தருவதில்லை; நமது நாடு நம்மிடம் இருப்பதில்லை; நமது உணர்ச்சியே நம்மிடம் இருப்பதில்லை. எனவே இந்த பிறவி முதலாளித்துவத்திடமிருந்து விடுதலைப் பெற்றுே தீர

வேண்டும் என்பதிலே திராவிட இயக்கம் பாடுபடுகிறது. அதன் பயனை தொழிலாளர்கள்தாம் பெரிதும் அனுபவிககப் போகின்றனர்.

## வறுமைக்குக் காரணமென்ன?

மக்களின் வறுமைக்கும் வாட்டத்துக்கும் காரணம் பொருளாதார யந்திரக் கோளாறு என்று கருதுகிறார்கள். யந்திரக் கோளாறு நிச்சயமாகவே மக்களின் வாட்டத்துக்குக் காரணம்தான். ஆனால் ஏன் இத்தகைய சுரண்டல் யந்திரம் உருவாக்கப்பட்டது. எப்படி யாரால்? மக்கள் ஏன் இதனை மதித்தனர்? ஏன் இன்னும் சகித்துக்கொள்கின்றனர்? என்று கூறி கஷ்டப்படும் மக்களை சுரண்டுபவர்கள் மயக்கியும் அடக்கியும் வைக்கப்படுகிறது? என்பனபோன்றவைகளை மக்கள் மன்றத்துக்குக் கொண்டுவந்து நிறுத்துவதுடன் சிந்திக்கத் தூண்டுகிறது. அந்தச் சிந்தனையின் பலனாக அறிவுத்துறையிலே ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பொருளாதார புரட்சியினால் மட்டும் புதுவாழ்வு கிடைத்துவிடாது என்று நம்புகிறோம். ஆழ்ந்த நம்பிக்கை இது. எனவேதான் நாம் அடிமைப்பட்ட காரணத்தையும் அந்த அடிமைத்தனம் எப்படி நீக்கப்பட வேண்டும் என்பதையும் நமது பிரசாரத்திலே முக்கியப் பகுதியாக வைத்துக்கொண்டிருக்கிறோம்.

## அவர்கள் பணி

மனதிலே உள்ள தளைகளை நீக்குவது அவசியமான காரியம் என்பதை உணர்ந்து ஐரோப்பா கண்டத்திலே பேரறிஞர்களான வால்டேர், ரூசோ போன்றோர் அறிவுத்துறைப் புரட்சிக்காக எவ்விதம் பணியாற்றினரோ அவ்விதமான பணியினையே நாம் புரிகிறோம்.

திராவிடனுடைய உழைப்பை மூன்று முனைகளி லிருந்து மூன்று சக்திகள் பறித்துக்கொள்கின்றன' ஆங்கிலேயன் ஆள்பவனுன், பொருளைத் தூக்கிச் சென்ருன்; வடநாட்டான் வணிக வேந்தனுன், பொருளை சுமந்து செல்கிருன்; இவ்வளவுக்கும் இட மளித்த திராவிடன் எக்கதி அடையமுடியும்! தேம்பு கிருன்; திகைக்கிருன்.

## உலகம் உழைப்பாளிக்குத்தான்

திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறுவது உலகம் உழைப்பாளிக்கே என்ற முழக்கம் போன்றதே. குறிச்சொல் மட்டுமே வேறு, குறிக்கோள் ஒன்றுதான். உலகம் உழைப்பாளிகளுக்கே, உளுத்தவர்களுக்கல்ல! பிறர் உழைப்பை உண்டு கொழுப்பவர்க்கல்ல, சுரண்டி வாழுபவர்க்கல்ல முதலாளித்வத்துக்கல்ல, ஆம்; அதே குரலில்தான் திராவிடநாடு திராவிடருக்கு ஆரியருக்கல்ல. அண்டிப் பிழைக்கவந்து நம்மை மண்டியிடச் செய்த மத தரகர் ஆட்டத்துக்கல்ல, உழைக்கும் உத்தமர்களாகிய திராவிடர்களுக்கே.

# பொன்மொழிக் கதைகள்

## தங்க ஓடு

தங்கம் விளையும் நாடு நம் தமிழ்நாடு. ஆகவே தில்லைத் தாண்டவ மூர்த்திக்குத் தங்க ஓடு போட்ட சன்னிதானம் சரி! ஆனால் பாறை வெடிப்புக்கும் பூமி சரிவுக்கும் அஞ்சாது பூமியிலிருந்து தங்கம் வெட்டி எடுப்பவன் தொழிலாளி. இவன் அறிவானா தங்க நகை?

## பிச்சைக்காரன்

காலற்ற கையற்ற பிச்சைக்காரர்களின் கடுந்துயர் கண்டு கடுகளவும் கவலைப்படாத மதவாதிகள், கந்த கோட்டத்திலே உள்ள குதிரை வாகனத்தின் வாலோ, மயில் வாகனத்தின் தோகையோ ஒடிந்துவிட்டதெனில் மிகக் கவலைப்படுவர். மனம் பதைபதைப்பர். தகுமா?

## மனைவி

மனைவியைத் தா என்னும் மாண்புமிக்க மகேஸ் வரனையும், நிர்வாணமாக பிச்சையிடு என்று கேட்கும் நீதியற்ற கடவுளையும் பாடும் நிகண்டுகளா நமக்குத் தேவை?

## இல்லாமை

வறுமை என்னும் அச்சம் மனிதனைவிட்டு நீங்கினால் தான் இல்லாமை போகும்; இல்லாமை நீங்கும்; அறிவுத் தெளிவு ஏற்படும்; ஆனந்த வாழ்வு மலரும். வறுமை

அச்சம் நீங்காத நாட்டில் அறிவு வளர்ச்சியோ விஞ்ஞான முன்னேற்றமோ ஏற்படாது.

## பழமைக் கருத்து

நாம் புராண ஏடுகளைப் படிக்கும்போது பழமைக் கருத்துக்கள் முதலில், தினைப்புனத்துப் பட்சிகள்போல, கூட்டம் கூட்டமாக வரும், உள்ளத்தைத் தொடும். ஆனால் அறிவுத் தெளிவு எனும் ஆலோலம் கேட்கக் கேட்க அவை பறந்தே போய்விடும்.

## அவதார புருஷன்

அவதார புருஷனாகிய இராமனுக்குத் தெரிந்ததெல்லாம் அயோத்தி, கிஷ்கிந்தா, தண்டகாரண்யம், ராமேஸ்வரம், சேது, இலங்கை, இவ்வளவுதான். ஆனால் நாமோ நம் காலத்தில், ரேடியோ மூலம் உலகத்தையே, நம் அறைக்கு அழைத்துவிடுகிறோம் இல்லையா?

## வறுமை

வறுமைத் தேள் கொட்டினாலும், பழி எனும் பாம்பு கடித்தாலும் பதறாமல் சலிக்காமல் விடுதலைப் போர் நடத்தியவர்தம் வீரச் செயல்களைப் படிக்கும்போது கோழையும் வீரனாகிறான், கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான்.

## ஆண்டவன்

பொருள்மீதுள்ள பற்றை அகற்றுங்கள். பற்றற்றிருப்பதே ஆண்டவனை அடையும் வழி என்கிறார்களே, அவர்களைக் கேட்கிறேன்; அவர்கள் குறிப்பிடும் அதே ஆண்டவன் இருக்கும் ஆலயங்களில் இலட்சக் கணக்கில் மதிப்பிடத்தகுந்த பொருள்கள் உள்ளதே ஏன்?

## வெற்றிகண்ட வீரர்

மகாராஜா என்றால் என்ன பொருள்? ஒரு பத்து இருபது தலைமுறையாவது அன்பெனும் பண்பை கோடீஸ்வரன் நிலைக்குப் பயணம் நடத்தி வெற்றி கண்ட வீரர் என்பதுதானே? இத்தகு ராஜாக்கள் இன்னமும் இருக்கலாமா நாட்டிலே?

## கைபிசைவது

களம் அமைத்துக் கொள்வது எளிது; ஆனால் களம் புகுந்த பின் கைபிசைவது கேவலம். எனவே களம் புகுமுன் பொது மக்களிடம் பிரச்சினையை விளக்கிக் காட்டி அவர்கள் சார்பில் போராட அனுமதி பெற்றாக வேண்டும் அரசியல் கட்சிகள்.

## பொன்னாடு

தம்பி, நீ விரும்பினால், இந்நாட்டைப் பொன்னாடு ஆக்கமுடியும்—அதற்கு ஒன்று தேவை—பொன்னும் பொருளும் நமக்கு மட்டும் கிடைத்தால் போதும் என்று எண்ணும் தன்னலம் சுட்டெரிக்கப்படவேண்டும்.

## கலைமகள்

கலைமகள் கடாட்சம் பெற்றுள்ள பழம் பெரும் நாடாம் இது; இருக்கலாம். ஆனால் 100க்கு 15 பேர் மட்டுமே இந்த நாட்டில் கல்வியறிவு பெற்றிருக்கின்றனர்; இது கேவலம் அல்லவா? இந்தக் கேவலம் போக்கப்பட வேண்டாமா?

## தீய உள்ளம்

அல்லிப் பூவிலே மல்லியின் மணம் கிடைக்காது ஆற்று மணலைக் கொண்டு ஆரம் தொடுக்க இயலாது

அவை போலவே தீய உள்ளம் படைத்தவர்களால் தூயதோர் திட்டம் தீட்டவும் இயலாது.

## பெரும் குப்பை

மாற்றுக்கட்சியினர் மட்டரகமாகத் திட்டினுல் மனம் பதைக்கக் கூடாது நமது தோழர்கள். ஏனெனில் அந்தத் தூற்றல் வெறும் குப்பை அந்தக் குப்பையும் நம் கழனியை வளர்க்கும் எருவாக மாறக்கூடும், நினைவிருக்கட்டும்.

## புத்தகசாலை

பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தகச் சாலையெனப் பெயரிடுவது குருடர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு வழிகாட்டிகள் வாழும இடம் என்று பெயரிடுவது போன்றதுதான்.

## ஏழை நாடு

நம் நாட்டை ஏழை நாடு என்கிறுர்கள். ஏழை நாடு என்றுல், ஏழை நாட்டிலே வைர நாமம் படைத்த ஸ்ரீரங்கநாதனும், வைரக் கிரீடம் தரித்த திருப்பதி வெங்கடாசலபதியும் இருக்கிறுர்களே அது எப்படி?

## ரயில்

நம் மக்களுக்கு அவர்கள் ஏறிச் செல்லும் ரயிலைக் கண்டு பிடித்தவர் யார் என்பது தெரியாது. ஆனுல் அதிலேறிச் செல்லுமிடத்தில், அவர்கள் தரிசிக்கப் போகும் கருணனந்த சுவாமிகளின் கால்பட்ட தண்ணீர் கர்ம நோய்கள் போக்கும் கதை பேசமட்டும் தெரியும்.

## திரு அருள்

வேத வேதாந்திகள், சித்தாந்த சிரோன்மணிகள் திரு அருள் பெற்றவர்கள் எம் நாட்டில் உண்டு என்று பேசலாம் பேசுகிறோம். ஆனால் எல்லாம் சரி; உம் நாட்டுக் கல்வி நிலையைக் கூறு; என்று பிறர் கேட்டாலோ வெட்கித் தலை குனிகிறோம் அல்லவா?

## எந்தப் புராணம்

எந்தப் புராணத்தை நீங்கள் நம்பினாலும் சரியே. அதிலே ஏதாவது, ஆபாசமற்றதாக அறிவுக்குப் பொருத்தமானதாக, அன்புக்கு இருப்பிடமானதாக இருக்கிறதா? இரா.

## கடவுள்

கடவுள் என்றாலே எல்லாவற்றையும் கடந்தவர் என்று பொருள். ஆனால் நம் நாட்டுக் கடவுள்கட்கோ, குடும்பம், பிள்ளைகுட்டி, பரத்தை, எந்தப் பாசமும் இல்லாமலில்லை, சரியா?

## அறிவிலே அக்கறை

அறிவிலே அக்கறை நாணயத்திலே நாட்டம் நீதியிலே நேர்மை, இம்மி அளவேனும் இருப்பின், கள்ளுக்கடை மறியல் செய்தோர், அதைச் செய்யு முன்னரே, கடவுள் பெயர் கூறி காசு பறிக்கும் ஸ்தாபனங்கள் முன் மறியல் நடத்தியிருக்க வேண்டாமா?

## பச்சிலை மூடி

ஆரியம் எனும் படுகுழிமீது புராணம் எனும் பச்சிலை மூடிக்கிடக்கிறது. பச்சையைக் கண்டு இச்சைப்பட்டு சென்றால், செல்பவர், நிச்சயம் படுகுழியில் வீழ்வர்.

## வீரர்கள்

வாளும் கையுமாக இருந்து, வீரர்கள் நாட்டை வீட்டை—மானத்தைக் காப்பாற்றுகின்றனர். ஆனால் தர்ப்பையுங் கையுமாக இருந்து, வஞ்சகர்கள், மன உறுதி அற்றவரை மயக்கியும் மிரட்டியும் அடக்கி வருகின்றனர்.

## தெருவுக்குத் தெரு

நம் நாட்டில் என்ன காண்கிறோம்? தெருவுக்குத் தெரு திருப்புகழ் பஜனை! பேட்டைக்குப் பேட்டை உடுக்கைச் சத்தம்; வீதிக்கொரு பிள்ளையார் கோவில். இப்படி இருக்கிறது நம்முடைய நாடு. எப்படிப் பிறப்பான் ஒரு லெனின் இங்கு?

## பழங்காலம்

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக்கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அதுபோலத்தான் பழமைக் கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக் கூடாது.

## சமையலறை

நம்மவர்வீடுகளிலே சென்றால் சமையலறை இருக்கும். பூஜை அறை இருக்கும். படுக்கை அறை இருக்கும். ஆனால் புத்தகம் வைப்பதற்கென்று ஓர் அறை நிச்சயமாக இருக்காது. நம் அறிவு வளரவில்லையென்றால் எப்படி வளரும்?

## பஜனை மடம்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்னும் கருத்தைப் புகுத்தும் ஏடுகளால் நாம் பகுத்தறிவைப் பெற முடியுமா? எனவேதான் கூறுகிறேன்...இத்தகு ஏடுகள் பஜனை மடங்களோடு இருக்கட்டும், மக்கள் மன்றத்திற்கு வரவேண்டாம்.

## பஞ்சணை

நாட்டிலே, மக்கள் உணவற்று உடையற்று இருக்க இடமற்று நிர்கதியாய் உலவுகின்றனர். ஆனால் நம் சாமிகளுக்கோ ஆயிரமாயிரம் வேலி நிலங்கள், பட்டுபஞ்சணை பீதாம்பரங்கள், பொன் வெள்ளி குதிரை யானை சவாரிகள் தேவையா?

## மல்லிகைத் தோட்டம்

மல்லிகைத் தோட்டம் வேண்டும் என்பதற்காக மாந்தோப்பை அழிப்பவர்களல்ல நாம். கள்ளியும் முள்ளும் படர்ந்துள்ள இடத்தைச் செம்மைப்படுத்தி, பிறகு அங்கு மலர்த்தோட்டம் அமைக்கவேண்டுமென்ற மாண்புடைய நோக்கம் கொண்டவர்கள்.

## ஏடுகள்

ஆண்டவனுக்குரிய ஏடுகள் என்று தனியே தயாரிக்கட்டும், ஆண்டவனைவிட்டு அகலமுடியாதவர்கள். ஆனால் அதற்காக ஏடுகள் எல்லாம் எம்பெருமானுக்கே அர்ப்பணம் என்ற நிலைமையை உருவாக்க வேண்டாம் நல்லறிவாளர்கள்.

## புன்செய்

நான் ஏட்டிலே படித்திருக்கிறேன். நம் நாடு நன்செய்யாலும், புன்செய்யாலும் நாற்புறமும் சூழப் பட்டதென்று! ஆனல் நாட்டிலே நான் காண்கிறேன் உண்ண உணவின்றிப் பல்லாயிர மக்கள் பரிதவிக்கும் பரிதாபத்தை. எப்படி வந்தது, இப்படி ஒரு மாறு பாடு?

## வரலாறு

நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்புள்ள நாடுகள் என்றும் நலியா. ஆனல், நாட்டிலே நனிசிறந்த ஏடுகள் நாலாயிரம் இருப்பினும் நாட்டிற்கும் ஏட்டிற் கும் தொடர்பின்றிச் சதிராடும் நிலையிருப்பின் அந்நாடு நசிந்தே போகும். இது, வரலாறு புகட்டும் பாடம்.

## நாம் ஒருவர்

நாம் திராவிடர்கள், மொழியால் நால்வர்; ஆனல் இனத்தால், பண்பால், பழக்கத்தால், குணத்தால், கோட்பாட்டால் ஒருவர்.

## ரோடுகள் இல்லை

தமிழ் நாட்டிலேதான் உண்டு வடநாட்டுத் தலைவர் கள் பெயரால் ரோடுகள், பூங்தோட்டங்கள், வளைவுகள்! ஆனல், காமராஜ் கடைவீதி, சுப்பையா சதுக்கம்! உபயதுல்லா ஊருணி, ஆச்சாரியார் அவின்யூ, கோபாலர் பூங்கா—இப்படி ஏதாவது உண்டா வட நாட்டில்? கிடையாது.

## ஜாதி முறை

ஜாதிமுறை ஒரு தந்திரமான சுரண்டல் திட்டம்! பாடுபடாமல் ஒரு சிறு கூட்டம் வாழவும், பெரும் பாலான மக்கள் செக்கு மாடுகள் போல கஷ்டப்பட்டே பிழைத்துத் தீரவுமான நிலை இந்நாட்டில் ஏற்பட்டிருப் பதே ஜாதி முறையினுல்தான்.

## சீரக சம்பா

சீரகச் சம்பா சாதத்தைச் சாப்பிட்டுவிட்டு கம்பங் கூழுக்கு மிஞ்சிய உணவு வேறுண்டா என்று பேசும் கிராம வாழ்க்கைப் பிரசங்கி போன்றவர்கள்தான் ஜாதி பேதங்களைக் கடந்தவர்போல் பேசி அதேபோல், ஜாதி முறை தரும் பலனை நுகர்ந்து வரும் ஆரியர்கள்.

## தென்றல்

மலர் விரிந்தால் மணம் வீசத்தான் செய்யும். மேகங்கள் கூடினுல் மயில் ஆடத்தான் செய்யும். தென்றல் வீசினுல் குளிர்ச்சி ஏற்படத்தான் செய்யும். இவை இயற்கை! இவை போலத்தான், நாட்டாட்சி காட்டாட்சியானுல் மக்கள் புரட்சிப் புயல் எழுப்புவதும் இயற்கை.

## தேவதாஸ்

தேவதாஸ்—லட்சுமி! அம்பேத்கார்—லட்சுமி! சுப்ப ராயன்—ராதாபாய்! இப்படி 'மங்களகரமான' செய்திகள் தம் செவியில் விழும் நாட்களிலே வாழும் மக்களிடம் சாதி ஆச்சாரத்தின் மேன்மையைக் கூறினுல், அதனை மதிப்பார்களா? மதிக்கத்தான் மாட்டார்கள்.

## விடுதலை

நாடு சீர்பட வேண்டுமானால், நாம் உலக மன்றத்தினரால் கேலி செய்யப்படாதிருக்க வேண்டுமானால், விடுதலையின் மூலம் நாம் உருவான பலனைக் காண வேண்டுமானால், நம் நாட்களிலே, சாதிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும்.

## சட்டம்

சட்டங்கள் நிரந்தரமானவை அல்ல; தேர்தல்களிலே பெருவாரியான வெற்றிகளைப் பெறுவதன் மூலம் சட்டத்தை உடைத்துத் தகர்க்க முடியும்!

## புகைவண்டி

புகைவண்டி தண்டவாளத்தைவிட்டுக் கவிழாமலும், குறித்த நேரத்தில் புறப்படவும், வந்து சேரவும் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு நாடாளும் நாயகர்களுக்கு உண்டு.

## மதம்

காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும், கருத்துக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.

## உழைப்பு

வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெற முடியாது; ஓயாத உழைப்பும், சலியாத முயற்சியும் வேண்டும்.

## மக்களாட்சி

மக்களாட்சியிலே முறைகேடான செயல்கள் நேரிடக்கூடாது; நேர்ந்தால் அது முடிதாங்கியையோ அடிவருடியையோ சேராது. மக்களைத்தான் சேரும். எனவே மக்கள் கண் விழிப்பாக இருக்கவேண்டும்.

## கிராமப்புறம்

பண்ணை முதலாளி உழைக்க வராமலும், கூலி விவசாயி நிலமற்று இருந்தாலும் விவசாயம் செழிக்காது. கிராமப்புறம் வளமாக இராது. வறுமை ஒழியாது.

## வைரம்

வைரம் ஜொலிக்க சாணை பிடிக்க வேண்டும்; தங்கம் பிரகாசிக்கத் தணலில் காய்ச்சவேண்டும். நல் வாழ்வு பெற பகுத்தறிவுப் பாதையில் செல்ல வேண்டும்.

## ஊழல்கள்

எப்போதும் விழிப்பாக இல்லாவிட்டால் எந்த ஆட்சியிலும் பலப்பல ஊழல்கள் மலிந்துவிடும், என்பதை நாடாள்வோர் உணரவேண்டும்.

## ஒருவனே தேவன்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற மனப்பான்மை மக்களுக்குத் தேவை. அருளை மட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை.

கோயில், குருக்கள், குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் மக்களுக்கு வேண்டாம்.

## மருந்து

மயக்க மருந்து கலந்த மது குடித்த காவலாளி மயங்கிக் கீழே வீழ்வது போல், தேசியத் தின்பண்டம் உண்ட மக்கள் சொக்கி விழுந்து விடுவார், என்ற தைரியம் ஆளவந்தாருக்கு வரக்கூடாது.

## கடலில் முத்து

முத்து அளிக்கும் கடல்! அகில்போல் பல தருக்கள் அளிக்கும் நம் காடு, வாழ்வுக்கு வகை அளிக்கும் நம் கழனி! வல்லமை அளிக்கும், மரபின் இயல்பு! வாய்மையும் தூய்மையும் அளித்துச் சென்றூர், நம் ஆன்றோர்.

## விந்தை மனிதர்

விந்தை மனிதரெனும், வெட்டிப் பேச்சாளரென்றும் வீராப்புப் பேசுவோரும், உள்ளூர உணர்ந்து கொண்டார், நமக்கின்று உள்ள நிலைமையோ பாய்மரமில்லாக் கப்பல், என்ற பெரும் உண்மையினை.

## செங்கரும்பு

செந்நெல் மணி குவித்துச் செங்கரும்பு விளைவித்துச், சேயிழையார் ஈன்றெடுத்த செல்வங்களோடு, இல்லறம் உவந்தளிக்கும் இனியன பலவும் பெற்று இன்புற்று இரு! இந்நிலையும், எல்லார்க்கும் ஏற்பட வேண்டும் என்பதனை மறவாதிரு!

## உண்மை நிலை

தம்மால் இயலவில்லை என்பதைக் கூறிடுவது தகுதிக்கு குறைவல்ல, உண்மை நிலையை மறைப்பது தீது ஆகாது என்ற உணர்வு உடையவர்கள், தம்மால் பணியாற்ற முடியாது போயிற்று என்பதைக் கூறிடுவர். இவ்வகையினர் மிகச் சிலரே! மிகப் பலருக்கு இத்தகைய இயல்பு ஏற்படாது.

## பொங்கல்

தம்பி! பொங்கற் புதுநாளிலே காண்கிறாயே பூசுணையும் இஞ்சியும்! இஞ்சியின் அளவு என்ன? பூசுணையின் அளவு யாது? எதற்கு எது மணம் அளிக்கிறது? விளக்கவா வேண்டும்.

## உழவன்

உழவன் செந்நெல் மணியினை, அடித்தெடுத்துக் களஞ்சியம் தனில் சேர்ந்திடும் வரையிலே, தான் மேற்கொண்ட பணியினின்றும் வழுவிடான்!

## இஞ்சியும் மஞ்சளும்

பயிர் தரமாக இல்லை, ஊட்டம் போதுமான அளவு இல்லை, கதிர் செம்மையாக இல்லை, பதர் மிகுதி மணி குறைவு, என்று ஏதேனும் கூறிவிட்டு, உழவன் தன் பணியினை விட்டு விடுகின்றானோ? விட்டுவிட்டிருப்பின் இன்று இல்லத்தில் இஞ்சியும் மஞ்சளும், மா பலா வாழையும், மற்றப் பொருள்களும் எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

## இது உறுதி

ஏர்கட்டி உழும்போது எட்டு உளதார் கேட்டு மகிழத் தக்க பாட்டெழுப்பிய உழவன், களை கண்டு கதி கலங்கி, இந்த வயலினிலே இறங்கியதே என் தவறு! என் உழைப் பதனை இதற்கீந்தது பெருந்தவறு! இனி என் உழைப்பை இதற்கு நான் அளித்திடவே போவதில்லை. அம்மட்டோ! இந்த வயலினையே அழித்தொழிப்பேன், இது உறுதி என்று இயம்பிடக் கேட்டதுண்டா? இல்லை!

## பலன் தரும்

பலன் காண உழைக்கிறான் மனிதன், அவன் காணும் பலன் வழங்கும் நிலமோ பலன் காணாதது மட்டுமல்ல, தன் வலிவு தானிழந்து, பொருளிழந்து போவதுடன், வெட்டுவார் நிற்பதையும் வெறுத்திடா மல், அவர்க்கும் இடம் அளித்திடும் பொறை உண்டே; அம்மம்ம! மிகப் பெரிது!

## வண்ணத்தாள்

வாழை, உண்பதற்கு, வழித்தெடுத்துக் கூழாக்கி வண்ணத்தாள் ஒட்டுதற்கா? கரும்பு சாறு பெற, அடுப்பிலிட்டு எரிப்பதற்கா? சந்தனம் மார்புக்கு; சாணம்போல் வீடு மெழுகுதற்கா? எதெதனை எம் முறையில் பயன்படுத்திக் கொள்கிறோமோ அதைப் பொறுத்து, அப்பொருளினால் நாம் அடைகின்றோம் பூழுப்பலனும்.

## மூலிகை

பச்சிளங் குழந்தைக்கு வந்துற்ற பயமூட்டும் நோயினை நீக்குதற்கு, மருத்துவர் கேட்டிடும் மூலிகை,

வேங்கை உலவும் காடதனில், பாம்புப் புற்றுக்கருகினிலே கிடைக்கும் என்று தாய் அறிந்தால், தயக்கம் காட்டி நிற்பாளோ, தடுத்தாலும் போகாதிருப்பாளோ!

## நல்ல சரக்கா?

கோணியிலேயுள்ளது நல்ல சரக்கா—போலிச் சரக்கா? கோணிக்குள்ளே பெருச்சாளிகள் இருக்கின்றனவா? சரக்கு எடை குறையாமலிருக்கிறதா? என்று சொல்லும் வேலை தராசைச் சேர்ந்தது.

## கல்விச் செல்வம்

கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது, அந்தச் செல்வம் காட்டிலே—பாறைக்கடியிலே—சுரங்கத்தில் இருக்கும் தங்கக் கட்டிகளாக இருக்கக்கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்தி, பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்கவேண்டும்.

## கண்ணாடி

'ரசம்' கலையாத கண்ணாடி முன் நின்று பார்த்தால் தான், 'முகம்' சரியாகத் தெரியும்! ஜனநாயகப் பண்பு கெடாதநிலை, ஆளுங்கட்சிக்கு இருந்தால்தான், எதிர்க் கட்சியின் தரம் தெரியும்!!

## புலியின் நகம்

ஆட்டினுடைய கழுத்தை வெட்டிக் கொண்டுவந்து' எங்களிடத்திலே காட்டினால் ஆச்சரியத்தோடு பார்க்க மாட்டீர்கள்! புலியின் நகத்தைக் கொண்டு வந்தால் 'புலி நகமா' என்று ஆச்சரியத்தோடு பார்ப்பீர்கள்.

## வேண்டாத பெண்டாட்டி

வேண்டாத பெண்டாட்டி கால்பட்டால் குற்றம்— கைபட்டால் குற்றம். சிரித்தால்—அழுதால் குற்றம் என்றால் என்ன செய்வது?

## பக்கவாத்தியம்

பாடுவோர்க்கும் பக்க வாத்தியங்கள் துணையா யிருக்கவேண்டும். ஆனால், பக்கவாத்தியங்கள், பாடும் பாட்டைவிட்டு விலகிச் செல்லுமானால், பாடகனின் தனிக் குரல் தனித்து ஒலிக்கச் செய்யும்.

## வழியும் கண்ணீர்

என்னைக் கைதுசெய்தால் யாரும் பதறக் கூடாது, கதறக்கூடாது. வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் காட்சியளிக்க வேண்டும்.

'உன் அண்ணனைக் கைது செய்துவிட்டார்கள்' என்று யாரேனும் ஒருவர் வந்து உங்களிடம் கூறினால், 'ஆம், தெரியும், உனக்கும் சேர்த்துத்தான் என் அண்ணனைச் சிறைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன், சென்று வருவார் வென்று காட்டுவேன்' என்று கூறுங்கள்!

கைதான செய்தி கேட்டு நீங்கள் கலங்கினால், கேலி செய்வார்கள். எனவே, நான் கைதாகும் நாளை நீங்களெல்லாம் நாட்டுக்கு ஒரு திருவிழாவாகக் கொண்டாடவேண்டும்.

## அழகான பெண்

அழகான பெண்ணைப் பார்த்து செந்தாமரை போல இருக்கிறாள் என்றால், செந்தாமரை பேசுமா? என்று கேட்டால் என்ன அர்த்தம்?

## பட்டினிக் குழந்தைகள்

பட்டினியால் பரதவிக்கிறார்கள். பாதையிலே பிணமாக விழுகிறார்கள்; பிச்சை எடுக்கிறார்கள்; ஊர் ஊராய் குழந்தைகளை விற்கிறார்கள்!

இந்தக் கொடுமை வெளியே! நமது வீடுகளிலே இன்பப் பொங்கல்! பொங்கற் புது நாள் தரும் இன்பம் உண்மையானதாக இருக்க வேண்டுமானால்,—

நம் வீடுகளிலே பால் பொங்கினால் மட்டுமே போதாது. நெசவாளர் நெஞ்சிலே சிறிதளவாவது மகிழ்ச்சி பொங்கவேண்டும்.

நெசவாளர் கண்ணீர் பொங்கினால், நம் வீட்டுப் பாற்பொங்கல், இன்பம் அளிக்காது.

எனவே இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க பொங்கற் புதுநாளில், மறவாமல், கைத்தறி ஆடைகளையே வாங்கி உபயோகியுங்கள்.

பாலும் பாகும் பருப்பும் கலந்த பொங்கலை அன்புடன் தரும் மங்கையர் உடலில் வடநாட்டு ஆலைச் சேலை இருந்தால் அந்தப் பொங்கல் இனிப்பளிக்காது நஞ்சு ஆகும்.

பொங்கற் புதுநாளில், வடநாட்டு ஆலைச் சேலையோ துணியோ வாங்கினால், தமிழ் நாட்டில் பத்து கைத்தறி நெசவாளர்களைப் பட்டினி போட்டுக் கொன்ற குற்றம் புரிந்தவராவோம்.

அன்னியத் துணிகளை வாங்காதீர்! ஆலைத் துணிகளை வாங்காதீர்! கைத்தறியாளரைச் சாகடிக்காதீர்!

இன்பம் பெறும் திருநாளன்று நெசவாளர் வாழ வழி செய்யுங்கள். கைத்தறி ஆடைகளையே வாங்குங்கள்; எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்யுங்கள்,

## தலைவலி மருந்து

மார்க்கட்டுக்குச் சென்று கோழி வாங்கி வருகிறவர்கள், கோழியின் தலையைப் பிடித்துத் தூக்கி வருவதில்லை; கால்களைக் கட்டித் தூக்கி வருகிறார்கள்.

அதேபோல், வாத்தை காலைப் பிடித்துத் தூக்கி வருவதில்லை; தலையைப் பிடித்துத் தூக்கி வருவார்கள். உயிர்ப் பிராணிகளைத் தூக்கி வருவதிலேயே சில முறைகள் உண்டு.

வயிற்று வலிக்கு உள்ளுக்கு மருந்து சாப்பிடுவார்கள்; தலைவலிக்குத் தைலம் தடவி விடுவார்கள். நச்சுக் காய்ச்சலுக்கு ஊசி போடுவார்கள்.

இப்படி நோய்க்கு மருந்து கொடுப்பதிலும் முறை உண்டு; வேட்டை முறையிலும் பலவகை உண்டு; அதேபோல், அவர்களை எங்கே சந்திப்பது என்பதற்கு வழி இருக்கிறது.

## நான்கு மாதம்

நாங்கள் உள்ளே போகிறபோது எங்கள் தோழர்கள் உங்களிடம் வரவா வழி செய்துவிட்டுப் போவோம்?

மலேயாவுக்கு நான்கு மாதம் வேலை செய்யப் போகிறவன், மகனை அழைத்து, மகனே, நன்றாகப் படி என்றும், மனைவியை அழைத்து கவலைப்படாதே என்றும் கூறிவிட்டுப் போவான். அவர் திரும்பி வரட்டும், வரட்டும் என்று குடும்பத்தாரும் காத்திருப்பர்.

மலேயாவுக்குப் போகிறவனும் போவான்; அவன் திரும்பி வருகிறவரை வீட்டிலுள்ளோர் அவன் குடும்ப நலனைக் காத்து வருவார்கள்! இதற்குமேல் விளக்கத் தேவையில்லை!

## ஏணிமேல்

ஏணிமேலே ஏறுகிறபோது தோளில் துண்டு போட்டுக் கொள்ள மாட்டார்கள்—தலையில் எடுத்துக் கட்டிக் கொள்வார்கள்!

குளிக்கப் போகும்போது பெரிய துணியைக் களைந்து சிறிய துணி உடுத்திக் கொள்வார்கள்!

ஆற்றில் குளிக்கும்போது கைகால்களை அசைத்து நீந்துவார்கள்; கிணற்றில் குளிக்கும்போது நின்ற படியே குளிப்பார்கள்.

## கோபுரம்

கோபுரத்திலே இருக்கிற பதுமை அழகான பதுமை; நம்மையே பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றும். ஆனால் அது தொட்டுத் தாலி கட்டிய மனைவிக்குச் சமமல்ல

அதைப்போல ஜனநாயக வாதி நான் வாக்குறுதி களைத் தருகிறேன்—என்று சொல்வது கோபுரத்துப் பொம்மைக்குச் சமமே தவிர வீட்டிலே கொலு வைத் திருக்கிற இல்லத்தரசிக்கு சமானமல்ல.

## மிளகாய்

மிளகாய் அரைக்கின்ற மிஷினில் ஒரு அரைமணி நேரம் இரு என்று யாரையாவது கூப்பிட்டால், யாரும் வரமாட்டான், நெடி அதிகமென்று போய்விடுவான்.

ஆனால், பலாப்பழம் கடையில் 'ஒரு பத்து நிமிடம் பார்த்துக் கொள்' என்றால், 'அரை மணி நேரம் கழித்து வா' பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்வான். ஏனென்றால், பலாப்பழக் கடையிலே பலாப்பழம்

கிடைக்கும்; மிளகாய் அரைக்கின்ற இடத்திலே நெடி அதிகமாகும்.

## தண்ணீர் கொடு

எழுத்தாளர்கள் மக்கள் வாழ்க்கைப் பிரச்சனையை விளக்கிக் காட்டும் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

தனது வீட்டிற்கு வந்த ஒருவர் தன்னோடு வெகு நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார் என்றால், அவருக்கு அவர் கேட்டதற்கு முன்னாலேயே தண்ணீர் கொடுப்பதுதான் நல்லது.

அதுபோல முன்னரே உணர்ந்து அவைகளை விளக்கிக் காட்டி எழுதவேண்டியது எழுத்தாளர் கடமையாகும்.

## நல்ல சமையல்

ஒருவன் நல்ல சமையல்காரனாக இருக்கலாம். ஆனால் கெட்ட மனிதனாக இருக்கலாம்; அதற்காக அவனது சமையலை யாரும் வெறுக்கமுடியுமா?

கெட்ட வியாபாரியாக உள்ள ஒருவன் நல்ல தகப்பனாக இருக்கலாம், அந்த நல்ல தகப்பனை அவனுடைய குழந்தைகள் வெறுக்க முடியுமா?

நல்ல கவிஞராக உள்ள ஒருவர் கெட்ட மனிதனாக இருக்கலாம்; அதற்காக அவனுடைய கவிதைத் திறமையை வெறுக்க முடியுமா?

உரை நடையை கருப்பஞ்சாறு என்றால் கவிதையை கருப்பட்டி என்று சொல்லலாம்.

நாம் கருப்பட்டி சுவையை கருப்பஞ்சாற்றில் காண வேண்டும் என்றால், கருப்பஞ்சாற்றை வயிறு நிரம்ப

உண்டால்தான் முடியும். உரைநடையைவிட கவிதை ஆற்றல் உடையது.

சிரங்கு வந்தால் அதைக் கத்தியால் சீவி விட்டால் போதாது. 'உள்ளுக்கு மருந்து சாப்பிட்டு பூச்சிகளை அழிக்க வேண்டும்-அது இல்லாமல் சிறங்கை சீவித் தள்ளும்படி கூறுபவன், மருத்துவனுகவும், இருக்க முடியாது; மதியுள்ளவனுகவும் இருக்கமுடியாது.

## இன்றே செய்க

ஏககாலத்தில் எல்லாவற்றையும் எதிர்க்கும் காரியம் நடக்காது. ஒன்றே செய்க. அதை இன்றே செய்க. அதையும் நன்றே செய்க, என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிருர்கள்.

## அமாவாசை

சிலர் அமாவாசை விரதம் பிடிப்பார்கள். காலையில் அமாவாசைச்சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு மாலையில் மிலிடரி ஓட்டலிலும் சாப்பிடுவார்கள்.

மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அது போல, பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

## உரிமை

எண்ணுகின்ற உரிமை, எழுதுகின்ற உரிமையை பறிக்கும் சட்டம் வந்தால் எழுத்தாளர்கள் எதிர்த்துப் போராட முன் வாரவிட்டாலும் அதற்கு தங்கள் எதிர்ப்பையாவது தெரிவிக்க முன்வரவேண்டும்.

## எழுத்தாளர்

எண்ணியதை எடுத்தெழுதும் திறன் எழுத்தாளர்களுக்கு இருந்தாலும் சிலர் எதற்காகவோ அஞ்சி அவ்வாறு எழுதுவதில்லை. அவர்களெல்லாம் எழுத்தாளர் இல்லை. வெறும் எழுத்தாளர்கள்தான்.

## விடிவதில்லை

அரசியல் பற்றி நமக்கென்ன என்று சிலர் எண்ணுகிறார்கள். அரசியல் வேண்டாம் என்று ஒதுங்கி விடுவதால் அவர்களை அது விடுவதாக இல்லை.

கலைத்துறையினர் நமக்கே அரசியல் என்று பேசி வருகிறார்கள்; வணிகத் துறையில் உள்ளவர்கள் நமது வியாபாரத்தைக் கவனிப்போம் என்று ஒதுங்குகிறார்கள். மாணவர்களுக்கு அரசியல் கூடாது என்று கூறிவிடுகிறோம்.

விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கினால் போதும் என்று இருந்துவிடுகிறார்கள்; தொழிலாளர்கள் தொழில் வளர்ச்சி ஒன்றே சரியென அதில் ஈடுபடுகிறார்கள்.

போலீஸ்காரர்கள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது என்ற பொது விதியே இருக்கிறது. சர்க்கார் ஊழியர்கள் அரசியலில் சம்பந்தப்படக் கூடாது என்ற சட்டமே இருக்கிறது.

இப்படி பொறுப்பு மிக்க பெரியவர்கள் அறிவாளி சமுதாயத்திலுள்ள இத்தனை பகுதிகளிலுள்ளவர்கள் எல்லாம் அரசியலில் அக்கரை காட்டாவிட்டால் அரசியலைத் திருத்துவது யார்?

அரசியலில் பொல்லாதவர்கள் இடம் பெற்றால் என்னவாகும்! ஒரு மாறுதல் அரசியலில் ஏற்பட்டால்

அது எல்லாத் தரப்பினரையும் பாதிக்கத்தானே செய்யும்!

விருப்பு வெறுப்பு பாராது, ஏழை ·பணக்காரன் என்ற பேதம் பாராட்டாது எல்லா தரப்பட்ட மக்களை யும் தீண்டுவது அரசியல்!

கடவுளுக்கு அடுத்தபடியாக அரசியல்; அனைவரை யும் ஆட்கொள்ளத்தான் செய்யும்!

## முட்டுச் சந்து

முட்டுச் சந்துகள், சருக்கல் வழிகள், சதுப்பு நிலங்கள், வரண்ட இடங்கள், மேடு பள்ளங்கள், முள்ளும் கல்லும் நிரம்பிய சிறு சந்துகள்-இப்படி இருக்கின்றன பலருடைய வாழ்க்கைப் பாதைகள். இருக்கவிடலாமா அரசாங்கங்கள்?

## பாம்புப் புற்று

சிங்காதானம் என்பது ஒரு பாம்புப்புற்று. அதன் மீது அமர்வோரை, அன்னார் ஏமாந்த நேரத்தில் புற்றி லிருந்து கிளம்பும் பாம்பு, பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும்; கொல்லாமல் எப்படி இருக்கும்.

## அட்லி பேசுகிருர்

ஆருயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இலண்டனில் அட்லி பேசுகிருர் என்ருல் கும்பகோணத் திலிருக்கும் கும்பேஸ்வரர் கபேயில் கேட்கமுடிகிறதே! இது மனித விஞ்ஞானத்தால்தான் முடிந்ததே தவிர, தெய்வ கதைகளாலா முடிந்தது?

## பூகோளம்

பூகோளப்படி இந்தியா ஒரு நாடாம்! இருக்கலாம்! ஆனால் பூகோளத்தை விஞ்ஞானமும் இன எழுச்சியும் மாற்றியிருப்பதை யார் மறுக்க முடியும்? பூகோளத்துடன் விஞ்ஞானம சேரவில்லையானல் சூயஸ்கால்வாய் ஏது?

## அழகு

அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்! ஆனல் பெண்களுக்குச் சமத்துவமும் சுதந்திரமும் கிடைக்கும் வரை இந்த ஆயுதத்தையே பயன்படுத்தித் தீரவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அந்த நிர்பந்தம் நீங்கியபின், அழகு இன்பக் காட்சியாக, இருக்க முடியும்.

## பால் தரும் பசு

பால் தரும் வரையில் பசு தொழுவத்தில் இருக்கிறது. பால் தருவது தீர்ந்ததும் கிராமத்திற்குத் துரத்தப்படுகிறது.

அதுபோலத்தான் முதாளித்வமுறை, இலாபம் கிடைக்கும் வரையில் தொழிலாளருக்கு வேலை தரும். இலாபம் இல்லையேல் வேலையில்லை என்று கூறிவிடும்.

## காதல் ஜோடி

காதல் மணங்கள் நிகழ்ந்து, ஜோடிகள் சரியாக அமைந்து, காதலுக்கு ஜாதியோ பீதியோ மற்ற ஏதோ தடையாக இல்லாதிருப்பின், உள்ளபடி நாட்டில் விபசாரம் வராது.

கபடன், வஞ்சகன், பொய்யன், சூதாடி, விபசாரி, திருடன் கொலைக்காரன் - இவர்களெல்லாம் யார் என்று கருதுகிறீர்கள்?

வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழுந்தவர்கள். பாதையை, சமுதாயம் சரியானபடி அமைத்திருந்தால், இந்தப் பட்டியல் ஏற்பட்டிருக்குமா?

## என் விதி

விதி விதி என்று பேசி மக்களின் மதியை மாய்க்கும் ஏடுகளல்ல நமக்குத் தேவை. தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை.

தன்னம்பிக்கை ஊட்டும் ஏடுகள் தேவை மதியைப் பெருக்கி விதியைத் தொலைக்கும் விளக்க நூல்கள் தேவை.

## பூசாரி

உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம் அரசியலில்! கபடன் காட்டிய வழி நடந்தோம் சமூகத் துறையில்!

பூசாரி காட்டிய வழி சென்றோம் அருள் பெறும் நெறியில்! எத்தன் காட்டிய வழி நடந்தோம் பொருளாதாரத் துறையில்! முடிவு? வாழ வழியற்றது தான்.

## சூரிய தோஷம்

எந்தவிதமான சடங்கு செய்தால் சூரிய தோஷம் நீங்கும்? - இது நம்முடைய ஆராய்ச்சி. சூரியன், பூமியை விட எத்தனை மடங்கு பெரிது? இது மேனாட்டானின்

ஆராய்ச்சி. இங்கிலேயில் அவன் வாழ்கிருன், நாம் வதைகிறோம் என்றால் இயற்கைதானே அது.

இப்போதெல்லாம் பாற்கடலிலிருந்து தேவர்கள் அமுதத்தை எப்படிக் கடைந்தெடுத்தனர் என்பதைக் காண விரும்பவில்லை.

தொழிலாளியின் இரத்தத்திலிருந்து முதலாளி எப்படி இரத்தினம் உண்டாக்குகிருன் என்பது போன்ற உண்மைகளைக் காண விரும்புகின்றனர்.

இந்த உலகத்திற்கு இல்லாத அந்த உலகத்துக்கு மிடையே பாதை அமைப்பதில் நம் முன்னோர்கள் முனைந்திருந்தார்களே தவிர உழைப்புக்கும் வாழ்வுக்கும் இடையே பாதை அமைக்கவில்லை. எனவேதான் இன்றளவும், இடரும் இருளும் நிரம்பியதாக உள்ளது மக்கள் வாழ்க்கை.

காலராவா? பிளேக்கா? அதோ பாருங்கள் பழைய வழி செல்பவனை! நேரே எங்கே ஓடுகிருன்?-மாரி கோயிலுக்கு! பூசாரியைக் கூப்பிட! : இதோ புதிய வழி யில் செல்பவனைப் பாருங்கள்! வைத்திய சாலைக்குப் போகிருன் டாக்டரைக் கூப்பிட! இரண்டு வழியிலே எது சிறந்தது?

## இந்தக் காலம்

"இந்தக் காலம கெட்டுவிட்டது-ஆஹா அந்தக் காலத்தைப் போல உண்டா?" என்று பேசுகிருர்களே அவர்களைக் கேட்கிறேன். அந்தக் காலம் என்று அவர்கள் கூறுவது எந்தக் காலத்தை? ஆங்கிலேயன் இங்கே வந்தானே ஆட்சி அமைக்க-அந்தக் காலமா? அதற்கு முன் மொகலாயர்களின் சாம்ராஜ்யம் இருந்ததே அந்தக் காலமா? அவர்களுக்கு முன்

தமிழர்கள் ஆட்சி புரிந்தனரே, அந்தக் காலமா? அவர்களுக்கு முன்பு காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தனரே மக்கள் அந்தக் காலமா? அந்தக் காலம் எந்தக் காலம்?

மக்கள் என்று சொல்லாமல் மஹாஜனங்கள் என்று சொல்வதால் என்ன குற்றம் ஏற்பட்டுவிட்டது என்று சிலர் கேட்கிறார்கள். குற்றம் ஏதும் வந்து விடவில்லை. தமிழர்கள் தமிழை மறந்துவிட்டனர் என்கிற பழியைப் பிற்காலம் நம்மீது சுமத்தும், அவ்வளவுதான்.

## விஞ்ஞானம்

இது வரை விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர, சமைத்தவர்களில்லை. விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால், போய் அருந்தி விட்டு, பிறகு குறையும் கூறியிருக்கிறோமே தவிர நாமாக எதையும் கண்டுபிடிக்கவில்லை.

## மோட்டார்

புத்தம் புதிய 'ப்யூக்' மோட்டாரில் பவனிவந்து கொண்டே புராண கால நாகரிகத்தைப் பாராட்டுவது சரியா?

பகுத்தறிவு அளித்த ரேடியோ மூலமாகக் குருட்டறிவை வளர்க்கும் காலட்சேபம் செய்வது முறையா?

டெலிவிஷன் அளவுக்கு வளர்ந்திருக்கும் விஞ்ஞானம்-மேல் நாட்டில்! ஆனால் இந்தியாவிலோ, கப்பல் விட்டால் பூஜை, விமானம் பறந்தால் தீபாரதனை என்று ஆளும் வர்க்கத்தார், கற்காலக் காலண்டரைப் புரட்டுகிறார்கள். புரட்டலாமா?

தமிழகத்தில் இப்போது மஹாஜனங்களை அல்ல, மக்களை காண்கிறோம்; விவாஹ சுப முகூர்த்தங்கள் இல்லை, திருமணங்களே நடத்துகின்றன; உபன்யாசம் கிடையாது, சொற்பொழிவுதான் உள்ளது; அக்ராசனாதிபதியைக் காணோம், தலைவர்தான் இருக்கிறார். வந்தனோபசாரம் இல்லை, நன்றி நவிலல்தான் இருக்கிறது; பொக்கிஷதார் மறைந்தார்; பொருளாளர்தான் பவனி வருகிறார். நமஸ்காரம் மறைந்தது, வணக்கம்தான் எங்குநிறைந்திருக்கிறது. இந்த எழுத்து மாற்றத்திலிருந்து மக்களின் எண்ணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் நன்கு புலனாகிறது.

காலத்திற்காகத்தான் கருத்துக்கள், கருத்துக்களுக்காகக் காலமல்ல. ஆகவே, காலத்திற்கேற்ப கருத்துக்களை மாற்றவேண்டும். காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்கித் தள்ளவேண்டும்.

## ஜீவகாருண்யம்

ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவை இருக்கு மட்டும் ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும்? அதுபோலவே தங்களுக்கு இலாபம் தரும் சாதனமாக இருக்கும் ஜாதியை ஒழிக்க எப்படி முன் வருவர் அந்த இலாபத்தை அடைபவர்கள்.

## அழகான பெண்

விஞ்ஞானம் குழைத்துரைக்கப்பட்ட வண்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம்-கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். குரங்கு எழுதப்பட்டால் குற்றம், கலர் கிண்ணத்தின் மீதா? அல்லது ஓவியம் மீதா?

## புலவர்கள்

தமிழ்ப் புலவர்களே, ஒரு வார்த்தை. தாராளமாக இலக்கியங்களை ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால் ஆராய்ச்சியிலேயே மூழ்கிவிடாதீர்கள். அடிக்கடி வெளியே வந்து, ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளைக் கூறி, மக்கள் வாழ்வை வளமாக்க வேண்டியது உங்கள் கடமை.

கோளங்களை ஆராயும் மேனாட்டவர்கள் கொசு வைப்பற்றியும் ஆராய்கிறார்கள். வானத்தை வட்ட மிட்டுப் பார்த்துவிட்டு, கடலில் மூழ்கியும் விஞ்ஞானத் தின் வளர்ச்சி தேடுகிறார்கள். ஆனால் நாமோ கல்யாணை கரும்புதின்ற கதையைப் படித்துக் கொண் டிருக்கிறோம். இருக்கலாமா?

## தவறான வழி

வாழைப்பழத்தின் தோலை வழியிலேயே வீசியெறிந் தால், அதன் மீது கால் வைப்பவரை வழுக்கி விட்டு விடும். அது போல, நாடகத்தைத் தவறான வழியில் பயன் படுத்தினால், அது பயங்கரமானது, மக்களைப் படு குழியில் தள்ளிவிடும்.

ஆஹா ஊஹூ பாட, அரம்பை ஊர்வசி ஆட. ஒற்றைச் சக்கரத்தேர் ஏறி, சுற்றி வருபவர் சூரிய தேவன்-இப்படிப் பாடுகிறோம் நாம் சூரியன் பற்றிய விஞ்ஞான உண்மைகள் தெரிந்த இந்தக் காலத்திலும்! பாடுவது முறையா?

## கவனிப்பு

பருவமும், அழகும் இருந்தும் மணாளன் இல்லாமல் வாடும் விதவையைப்போல் ஒரு நாடு வேதனைக்காடாக விளங்கக் கூடாது.

# அண்ணாவின் கடைசிக் கடிதம்

எந்தப் பணி எனக்கு இனிப்பும் எழுச்சியும் தந்து வந்ததோ,

எந்தப் பணியிலே நான் ஆண்டு பலவாக மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்திருந்தேனோ,

எந்தப் பணி மூலம் என்னை உன் அண்ணனாக நீ உள்ளன்புடன் ஏற்றுக் கொண்டு, பெருமிதத்துடன் உலகுக்கு அறிவித்து வந்தனையோ,

எந்தப் பணி வாயிலாக என் கருத்துக்களை உனக்கு அளித்து உன் ஒப்புதலைப் பெற்று அந்தக் கருத்துக் களின் வெற்றிக்கான வழியினைக் காண முடிந்ததோ,

எந்தப் பணியின் மூலம் தமிழகத்தை அறியவும், உலகத்தை உணரவும், தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்து வந்ததோ, எந்தப் பணி மூலம் எப்போதும் உன் இதயத்தில் எனக்கு ஓர் இடம் கிடைத்து, அது குறித்து நான் அளவற்ற அகமகிழ்ச்சி பெற முடிந்ததோ,

அந்தப் பணியினை முன்பு போலச் செய்ய முடியாதவனாக்கப்பட்டு, முடியவில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டுக் கிடக் கிறேன் என்பதனை அறிவாய்.

'சூழ்நிலையின் கைதி'—என்ற சொற்றொடருக்குத் தான் முதலமைச்சர் என்று முத்திரையிட்டிருக்கிறார்கள்.

தம்பி! தம்பி! தம்பி!—என்று கிழமை தவருமல் பலப்பல ஆண்டுகள் உன்னை அழைத்து உரையாடி அளாவளாவி வந்திருக்கிறேன். இரண்டு ஆண்டுகளாக அந்த விருந்தினை இழந்து தவிக்கின்றேன்.

முதலமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களை அறிக்கைகள், சொற்பொழிவு கள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்து விட முடிகிறது—தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக் கொண்ட 'கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை.

பிரச்சினைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக் கிட, அச்சம் துடைத்திட, மறுப்புக்கு மறுப்புரைக்க, 'வாழ்க வசவாளர்' என்று அவர்களையும் வாழ்த்திட, "தம்பிக்குக் கடிதம்" மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது.

எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறிடுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி.

எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம்.

கவலை குடையும்போது, மன உளைச்சல் ஏற்படும் போது, உன்னோடு உரையாடி, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற எழுச்சி பெற்று வந்தேன்.

இப்போது? அந்த இன்ப நாட்களை எண்ணி எண்ணி ஏக்கம் கொள்கிறேன். சுமக்கும் பளுவினலே கூனிக் குறுகி வாடுகிறேன். எத்தனை எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றிய கருத்துக்களைக் கூற நேரமோ, வாய்ப்போ இன்றித் தவித்திடுகின்றேன்.

ஆயினும், முன்பு செல்விட்டதைக் காட்டிலும் அதிக நேரம் வேலைக்காக ஒதுங்குகிறேன். இலக்கியச் சுவை நுகர்ந்திட நேரமில்லை. கலை அழகினை எண்ணிட நேரமில்லை. வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! உடலும் உள்ளமும் அலுத்துப் போகும் அளவு கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கவே காலம் போதவில்லை—களிப்புப் பெற்றிட உன்னிடம் உரையாடிட நேரத்தைக் கண்டறிவதே மிகச் சங்கடமாகி விட்டது.

இந்தக் கிழமை எப்படியும் தம்பிக்குக் கடிதம் எழுதிட வேண்டும் என்று தீர்மானித்து எழுதத் தொடங்குவேன். தொலைபேசி மணி ஒலிக்கும்......

*சீப்பா......*

ஆமாம், நான்தான்......எங்க ஊர் வாய்க்கால் விஷயமாக மனு அனுப்பினது பற்றி......

*பரிசீலனையில் இருக்கிறது.*

அண்ணா! நீங்க பார்த்து முடிவு செய்ய வேண்டியதுதானே, இதற்கு என்ன பரிசீலனை தேவை?

*அப்படி அல்லவே, இலாகா பரிசீலனை செய்தாக வேண்டுமே......*

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது—எப்படியும் முடித்துக் கொடுத்தாக வேண்டும்.

*சரி. சென்னைக்கு வரும்போது விளக்கமாகக் கூறுகிறேன்.*

உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் அண்ணா!

*ஆகட்டும்! ஆகட்டும்!*

வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். இளைப்பும் களைப்பும் அதிகமாகத் தெரிகிறது போன மாதம் பார்த்தபோது...

தம்பி! என் மனதுக்கு இனிமை தந்திடும் பணியிலே என்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லையே என்ற கவலை ஒருபுறம்; அத்துடன் பின்னிப் பிணைத்துக் கொண்டு என் உடல் நிலையைப் பற்றிய கவலை ஒருபுறம்.

என் பேரப் பெண், இளங்கோவனின் மகள் கண்மணி மழலை மொழியில் பாடுகிறாள்:

நலந்தானா? நலந்தானா?
உடலும் உள்ளமும் நலந்தானா?

என்று. எனக்கென்னவோ அந்தப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம், என் தம்பிகள், தங்கைகள், நாட்டின் நல்லோர் அனைவருமே என்னை நலந்தானா? என்று கேட்பது போலவே தோன்றுகிறது. கடந்த ஓராண்டாகவே, இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது; அமெரிக்கா சென்று அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால், அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தன. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன்—மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன்.

தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன்.

அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டுவிடும்போது குமுறிப் போகிறேன். அக்கிரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல் பாய்கிறது; இந்நிலை உடலைப் பாதிக்கிறது. மருத்துவர்கள் பலர் என் உடல்நிலை தேறிடத் துணை நிற்கின்றனர். ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக கண்ணால் காணும்போதுதான் உண்மையான 'மாமருந்து' கிடைக்கிறது. கிடைத்தற்கரிய அந்தச் செல்வத்தைக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைத்திருககு எண்ணும் என்னை, தம்பி! நான மேற்கொண்டு விட்ட 'கடமை' வேலையைக கவனி! வேலையைக கவனி! என்று முடுக்குகிறது.

இன்று எப்படியும் எழுதுவது—ஆண்டுக்கோர் நாள்—அருமைமிகு திருநாள்—பொங்கற் புதுநாள்—அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, ஏடெடுத்தேன், எழுத! எடுத்து?

நிதிக் குழுவினருடன் பேச வேண்டிய பிரச்சினை பற்றிய தகவல்களுடன் நிதித் துறைச் செயலாளர், அமைச்சர் மாதவனுடன் வந்தார்! ஒரு மணிக்கு மேல் உருண்டோடி விட்டது—சிக்கலான பிரச்சினைகள்—பேசித் தீர்த்தாக வேண்டிய பிரச்சினைகள்—நமது மாநிலத்து வருவாய்த் துறையை எந்தெந்த முறையிலே செப்பனிட முடியும் என்பது பற்றி ஆய்ந்தறிய வேண்டிய கட்டம். உன்னை மறந்தேன் என்ற பொருள் கொள்வாயோ!! விவரமறிந்த தம்பியாயிற்றே! உனக்

காகவும் சேர்த்து மேற்கொள்ளப்படுகிற வேலை என்பதனை அறிவாயே. பிரச்சினைகளைப் பேசினோம்; புள்ளிவிவரங்களைச் சரி பார்த்துக்கொண்டோம்; தொடர்பான நிகழ்ச்சிகள் பற்றிய முறைகளை வகுத்துக் கொண்டோம்.

அதற்குப் பிறகுதான் எழுத ஆரம்பித்தாயா அண்ணா! என்றுதானே கேட்கிறாய்.

அதற்குப் பிறகு அல்ல, தம்பி! அதைப்போல மூன்று நான்கு தவிர்க்க முடியாத வேலைகளைக் கவனித்தான பிறகு, எழுத வேண்டும் என்று முடிவு எடுத்ததற்கும் எழுதத் தொடங்கியதற்கும் இடையில் ஆறு ஏழு மணிகள் சென்றுவிட்டன. இந்நிலையில் நான் இருந்திடினும், பொங்கற் புதுநாள் வாழ்த்தினைத் தெரிவித்துப் பெற்றிடும் மகிழ்ச்சியினை மட்டும் நான் இழந்துவிட மாட்டேன். நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா, அது? எத்தனையோ இன்னல்கள் தாக்கிடினும், அவைகளை மறந்து, ஒரு நாள் மனைதோறும், மனைதோறும், மகிழ்ச்சியுடன் கொண்டாடிட என்று அமைந்த நாளல்லவா, பொங்கற் புதுநாள்! பேச்சிலே ஓர் இசை கலந்திடும் நாள், இத்திருநாள் இந்நாளிலே உனக்கு வாழ்த்துக் கூறுவதிலே பெற்றிடும் இன்பம் ஈடற்றதல்லவா. எனவேதான் எப்படியும் எழுதுவது என்று உட்கார்ந்தேன்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

காலத்தை வீணாக்காமல் சமூகத் தொண்டாற்ற ஓர் துடிப்பு உனக்கு உண்டு என்பதனை உணர்ந்த உன்

அண்ணன், இன்று உனக்குக் கனிவு நிரம்பிடும் வாழ்த்தினை அளிப்பதுடன், உன் இல்லத்துள்ளார் யாவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன், நாடு வளம் பெற, சமூகம் சீர்பெற, சமதர்மம் மலர்ந்திட பாடுபடு வதற்கான உறுதியினை இன்று பெற்றிடுக என்று கூற விரும்புகிறேன்.

ஒரு நிமிடம்கூட வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம், தம்பி! எங்கோ படித்ததாக நினைவு. ஒரு நிமிடத்தில் விண்ணிலிருந்து 6000 விண்கற்கள் விழுகின்றன; பூமி தன்னைத்தானே 950 மைல் வேகத்தில் சுற்றுகிறது; 100 பேர் இறந்து படுகின்றனர். 114 குழந்தைகள் பிறக்கின்றன. 34 திருமணங்கள், 16 விவாக விடுதலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; 68 மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதாக.

காலம் அத்துணை மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச் செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணுங் கருத்து மாக இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கோர் மகிழ்ச்சி தந்திடும்போல, உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் எனபதிலே ஐயப்பாடு இல்லை.

என்னைப் பொறுத்த மட்டிலே தம்பி! நலிவைத் தாங்கிக் கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்து கொண்டு வருகின்றேன்.

தாத்தாவுக்கு ஏன் கை வலி தெரியுமா.........
எழுதுவதாலே!—என்று என் பேரன் மலர்வண்ணன்—
என் மகன் டாக்டர் பரிமளம் பெற்ற செல்வம்—கூறு
கிறான். உண்மைதான்! வலி இருக்கத்தான் செய்
கிறது—ஆனால் தம்பிக்கல்லவா எழுதுகிறேன்; அது
தனியானதோர் சுவையைத் தருகிறது. மகிழ்ந்திரு!
விழா நடத்திடு! வேலை மிகுதி இருக்கிறது என்ற
நினைப்புடன்.

அண்ணன்,
அண்ணாதுரை.